ரூ. 8.00

திருவள்ளுவர் ஆண்டு 2050 சித்திரை – வைகாசி
ஏப்ரல் – மே 2019.

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய
திங்களிதழ்

குருநாதர் அடிச்சுவட்டில்



சிறப்பாசிரியர் : **தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்**

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திருவள்ளுவர் ஆண்டு 2050	மாதம் : சித்திரை- வைகாசி
மலர் : 33	இதழ் : 4 - 5

செட்டிநாடு தமிழ்ப்பண்பாட்டின் தனிவீடு!

செட்டிநாடு, தமிழ்ப்பண்பாட்டின் தனி வீடு. தமிழர் நாகரிகத்தின் மணிமுடி. அள்ளக் குறையாத அமுதத் தமிழை வளர்த்த பூமி. வற்றாத கொடை அளித்த வள்ளல் பெருமான்களைத் தந்த நாடு. ஆன்மீகம், கலை, கல்வி, தமிழ்மொழி இவற்றையெல்லாம் ஒருங்கே வளர்த்த புண்ணிய பூமி.

அருள்தரு சணமுகநாதப் பெருமான் கோயில் கொண்டிருக்கிற குன்றக்குடியை மையமாக வைத்து பிரிக்கப்பட்ட 96 ஊர்களைக் கொண்ட பகுதி.

காசி விசாலாட்சி கலி மதுரை மீனாட்சி கட்டியுள்ள ஆடைகளும், கழுத்தில் உள்ள பொன்நகையும், சுற்றியுள்ள மண்டபமும், தூக்கி வரும் வாகனமும், மற்றும் அழியாத மொட்டைக் கோபுரத்து அழகும் அண்ணாமலையில் அமர்ந்திருக்கும் பேரழகும் ஆக்கிக் கொடுத்தவர்கள், அமர்ந்து இருந்து காத்தவர்கள் நாட்டுக்கோட்டை வளர்த்த நகரத்தார் அல்லவோ என்று செட்டிநாட்டுப் பகுதியில் வாழும் நகரத்தாரைப் பற்றிப் பாட்டுக்கோட்டையில் இந்தப் பாரைக் கட்டி ஆண்ட கவியரசு கண்ணதாசன் குறிப்பிடுகின்றார்.

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற மகத்தான மகாமந்திரத்தை உலகத்திற்கு அறிவித்தது இந்தப் பகுதிதான். செல்போன்கள், சின்னத்திரைகள், இணையதளங்கள், வாட்ஸ்அப் இவையெல்லாம் இல்லாத காலத்தில் உலகத்தை நெருக்கமாக

எண்ணிப் பார்த்தான் இந்தப்பகுதித் தமிழன். தகவல் தொடர்புகள் விரிந்து பரந்து இல்லாத காலத்தில் உலகத்தைத் தன் உள்ளங்கையில் வைத்து அழகு பார்த்தவன் இந்தப் பகுதித் தமிழன். அண்டங்களும், கண்டங்களும் விரிந்து பரந்து கிடந்த காலத்தில் இந்த மகாமந்திரத்தின் மூலம் உலக ஒற்றுமையைச் சொன்னான்.

இந்தப் பகுதியைத் தொட்டால் தமிழ் மணக்கும். வீசுந்தென்றலிலும் தமிழ் மணக்கும். ஓடும் நதியிலும் தமிழ் மணக்கும். குறிப்பாய், கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும் என்பதைப் போல, நமது செட்டிநாட்டு ஆச்சிகள் பாடுகிற தாலாட்டிலும் தமிழ் மணக்கிறது. ஒரு தமிழ்த்தாய் பாடுகிற தாலாட்டைப் பாருங்கள்.

"வையை பெருகி வர
வாந்த மணல் ஊறிவர
ஊரி வந்த தண்ணியிலே
ஒட்டிவந்த கட்டி முத்தோ
பெருகி வந்த தண்ணியிலே
பின் அணைந்த சந்தனமோ
சந்தனமோ என் பொருளோ
சாமிதந்த தவப் பயனோ
கொட்டி வைத்த முத்தோ
குமிச்சு வைத்த ரத்தினமோ
கட்டிக் கரும்போ
காணிக்கை ஆணிமுத்தோ
முத்தில் ஒரு முத்தோ
முதிர விளைந்த முத்தோ"

என்று பாடுகிற அந்தத் தாலாட்டு நீண்டு தாழ்வாரத்தில் தென்றல் தவழ்ந்து போவதைப் போல தமிழ் தவழ்ந்து செல்கின்றது.

காதல் உணர்வைக் கூட நாகரிகமாய், மென்மையாய் ஒரு தாய் சொல்கிறாள். குழந்தை அழுகிறது. அழும் குழந்தைக்கும் காரணம் கேட்கிறாள். அந்தக் காரணத்தில் காதல் உணர்வு மறைந்து நிறைந்திருக்கிறது.

"மாமன் அடித்தானோ
மல்லிகைப்பூச் செண்டாலே
அத்தை அடித்தாளோ
அல்லி மலர்ச் செண்டாலே
அடித்தாரை ச் சொல்லியழு
ஆக்கினைகள் செய்துவைப்போம்
தொட்டாரைச் சொல்லியழு
தோள்விலங்கு போட்டு வைப்போம்
ஆரும் அடிக்கவில்லை
ஐவிரலும் தீண்டவில்லை
தானா அழுகின்றான்
தம்பிதுணை வேணுமென்று
அவனா அழுகின்றான்
ஆத்தாள் மடிதேடி"

இந்தத் தாலாட்டில் காதல் உணர்வும் கனிவாய், மென்மையாய் அழும் குழந்தை வழியே நளினமாய்ச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இதைப் போலத் தான், ஒப்பாரிப் பாடலிலும் இழப்பை எண்ணி அழுகிற பெண்களின் கண்ணீரைக் காண முடிகின்றது. இளம் வயதில் தன் கணவனை இழந்து தவிக்கிற பெண்களின் கண்ணீர்த் துளிகள் தமிழ் ஆறாய் ஓடுகின்றது. ஒரு தமிழ்க் கவிதையின் ஜீவநதியைப் போல, அந்த இயலாமை, ஏக்கம், பெருமூச்சு, கணவனை இழந்தத் துயரம் கனலாய்ச் சுடுகின்றது. இதுதான் இந்தப் பகுதியின் தமிழ் உணர்வின் மிகப் பெரிய பிரமாண்டம்.

தமிழ்நாட்டு மேடைகளிலே தமிழில் பாடுவதற்குத் தடையாய் இருந்த காலம். பண் சுமந்த பாடல்கள், இறைவன் விரும்பிக் கேட்ட இன்தமிழ்ப் பாடல்கள், தமிழ்நாட்டின் இசைமேடைகளில் பாடப்படாமல் தடைசெய்யப்பட்டிருந்தன. தமிழ்நாட்டு இசை மேடைகளிலே தமிழ்ப் பாட்டுப் பாடுவதற்குத் தடையாய் இருந்ததோடு மட்டுமல்லாமல், தப்பித் தவறித் துக்கடா என்று ஓரிரண்டு தமிழ்ப் பாடல்களைப் பாடுவார்கள். அப்படி ஒரு மேடையில் தமிழில் பாடிய காரணத்திற்காக மேடை

தீட்டாகிவிட்டதென்று மேடையைக் கழுவிவிட்டார்கள். இந்தப் பகுதியில் இருந்துதான் உணர்வோடு ஒரு தமிழர் கிளம்பினார். அண்ணாமலை அரசர் என்ற மகத்தான மாமனிதர் தமிழ்நாட்டு இசை மேடைகளில் தமிழில் பாடத் தடையா? என்று வெகுண்டு எழுந்தார். தமிழிசை இயக்கத்தை உருவாக்கினார். கடும் எதிர்ப்புகளுக்கிடையே தமிழிசை மறுமலர்ச்சி இயக்கத்தை உருவாக்கினார். கடும் எதிர்ப்புகளுக்கிடையே தமிழிசை மறுமலர்ச்சி அடைந்தது. தனி ஒரு மனிதர் தமிழிசை இயக்கத்தை உருவாக்கினார் அண்ணாமலை அரசர் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

மண்ணெல்லாம் விண் முட்டும் கோபுரங்கள், வண்ணங்கள் எல்லாம் உயிர்ப்புடைய ஓவியங்கள், கற்கள் எல்லாம் அருமையான பொற்சிலைகள் என கலையை, பண்பாட்டை வளர்த்தவர்கள் இந்தப் பகுதித் தமிழர்கள். அந்தப் பண்பாட்டின் மணிமுடியாய் தமிழ்நாட்டு இசை மேடைகளில் தமிழிசை முழங்கவேண்டும் என்று பாடுபட்டவர் அண்ணாமலை அரசர்.

தேவகோட்டையில் நடைபெற்ற தமிழிசை மாநாட்டை கல்கி இரா. கிருஷ்ணமூர்த்த அவர்கள் மிகவும் சிலாகித்து பாராட்டுகிறார். சென்ற காலத்தில் தமிழ்நாட்டினரின் கண்களும், கவனமும் இரண்டு கோட்டைகளின் மீது இருந்தன. ஒன்று மாஸ்கோ கோட்டை. இன்னொன்று தேவகோட்டை. தேவகோட்டை மாநாட்டின் நோக்கம் நிறைவேறி விட்டது. 01.11.1941இல் இப்படிக் குறிப்பிடுகின்றார். தேவகோட்டையில் சின்ன அண்ணாமலை நடத்திய தமிழிசை மாநாடு மிகவும் பயனுள்ளதாகவும், பூரண வெற்றியுடனும் நடந்திருக்கிறது. இதை இவ்வளவு ஊக்கத்துடனும், உணர்வுடனும், உற்சாகத்துடனும் நடத்திய செட்டிநாட்டு இளைஞர்களை எவ்வளவு பாராட்டினாலும் போதாது என்று சொல்லி, பாராட்டிக் குறிப்பிட்டிருக்கின்றார்.

கம்பன் அடிப்பொடி சா. கணேசனார் தான் சட்டை அணியாதபோதும் கம்பனைச் சட்டை செய்யாதவர்களையெல்லாம் சட்டை செய்யவைத்தார். கடவுள் மறுப்பாளர்களையும் கம்பனை ஏற்கும்படி வைத்தார். பொதுவுடைமைவாதிகளையும் கம்பன் புகழ்

பாடவைத்தார். அவர் சட்டையில்லாமல் இருப்பதற்கான காரணம் 1938 இல் சுதந்திரப் போராட்ட வீரர்களோடு, தலைவர்களோடு அவர் பயணித்தபோது, கானாடுகாத்தானில் தேச விடுதலைப் போராட்டத்தின் ஒரு பொதுக்கூட்டம். அதில் பங்கேற்க தீரர் சத்தியமூர்த்தி, டாக்டர் சுப்பராயன், பாரிஸ்டர் ஜோசப் என்.கிருஷ்ணமூர்த்தி போன்ற பெருந்தலைவர்களோடு கம்பனடிப்பொடி சா.கணேசன் செல்கிறார். அவரைப் போலீசார் தடுத்து நிறுத்துகிறார்கள். மீறினால் சுட்டுவிடுவதாக மிரட்டுகிறார்கள். அப்போது தன் சட்டையைக் கிழித்து, நெஞ்சைத் திறந்து காட்டி, "சுடுங்கள்..." என்று வீறுகொண்டெழுந்தார். அதுகண்டு செயலிழந்து நின்றனர் போலீசார். அன்று முதல் தன் வாழ்நாள் இறுதிவரை சட்டை அணிவதையே நிறுத்தி விட்டார். அவர் சட்டையணியாததன் இரகசியம் இதுதான். தேசம் அவமானப்பட்டுக் கிடக்கின்றது. இந்தத் தேசத்தின் அவமானம் நீங்கும் வரை சட்டை அணியக்கூடாது என்று இருந்த மகத்தான தேசவிடுதலைப் போராட்ட வீரர் அவர். ஆகஸ்டு புரட்சிக்காகத் தேச விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று தலைமறைவாக இருந்தபோது, அவரைப் பிடிக்க முடியவில்லை என்பதற்காக அவர் வீட்டைக் காவல் துறையினர் சூறையாடுகின்றனர். விலையுயர்ந்த பொருட்களைக் கொள்ளை கொண்டு போகிறார்கள். அதன்பின் அவர் கைதாகி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது விசாரணையில் "உன் ஜாதி என்ன" என்று அவரிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு, "நான் இந்தியன்" என்று நெஞ்சை நிமிர்த்திச் சொன்னார். ஜாதியைச் சொல்ல மறுதலித்துவிட்ட தேசத்தையே நேசித்த தேசப்பக்தர் அவர். தான் சிறைக்கோட்டத்தில் இருந்தபோது, சிறைக்கோட்டத்தைக் கம்பன் கோட்டமாக, தமிழ்க் கோட்டமாக மாற்றிக் காட்டியவர் அவர். அதனால்தான் பண்டிதர் நேரு அவர்கள், நாடு விடுதலை அடைந்து பிரதமராய் காரைக்குடி அழகப்பா கல்லூரியைத் தொடங்கி வைக்க வந்தபோது, கம்பனடிப்பொடி சா. கணேசனாரைப் பார்த்து, "கம்பரே...நலமா?" என்று கேட்டார். இதைவிட கம்பன் புகழ் பாடுகிற சா. கணேசனாரின் கடமையைப் பாராட்ட வார்த்தைகள் இல்லை.

1939இல் காரைக்குடி கம்பன் கழகத்தைத் தொடங்கினார். கம்பனடிப்பொடி சா. கணேசனார் நிகழ்ச்சியைக் குறித்த நேரத்தில்

தொடங்குவார். குறித்த நேரத்தில் முடிப்பார். நேரவரையறையைப் பாராட்டிப் பேசுவார். "கடிகாரம் பார்த்தே தான் காரியங்கள் செய்வதென பிடிவாதம் கொண்டுள்ள பேரவையின் தலைவர்களே... கடிகாரம் என் பகைவன். கணேசர் பயத்தினாலே கடிது இங்கே ஓடி வந்தேன்..." என்று நேரதாமதம் வந்துவிடுமோ என்று அஞ்சி அஞ்சித் தான் வந்ததை கவியரசர் கண்ணதாசன் குறிப்பிடுகிறபோது, நேரவரையறையில் கம்பனடிப்பொடி காட்டிய அக்கறையை நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

ஒருமுறை பொதுவுடைமை இயக்கத்தவர் ஜீவா அவர்கள் கம்பன் கழக மேடையில் பேசுகிறார். மேடையில் பேச்சாளர்கள் பேசுகிறபோது, நேரக் கட்டுப்பாட்டிற்காகச் சிவப்பு விளக்கு காட்டப்பட்டுவிட்டால் பேச்சை நிறுத்திவிட வேண்டும். ஜீவா பேசுகிறார். சிவப்பு விளக்கு காட்டப்பட்ட நிலையிலும் அவர் பேச்சைக் குறைக்கவில்லை. கம்பனடிப்பொடியும் அவரைக் கட்டுப்படுத்தவில்லை. நிகழ்ச்சி முடிந்தபிறகு, "சிவப்பு விளக்கு காட்டப்பட்டபிறகும், ஜீவா பேசினாரே..." என்று கம்பனடிப்பொடியிடம் கேட்ட போது, "ஜீவாவா பேசினார் கம்பனே பேசினார். அதனால் சிவப்பு விளக்கு என் கண்களுக்குத் தெரியாமல் போய்விட்டது". என்றார். இப்படி நேரத்தைக் கட்டிக் காத்த கம்பன் கழகத்து மேடையின் பெருமையை என்னவென்று சொல்வது?

"நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று ஓர்மணி ஆரம் படைத்த தமிழ்நாடு" என்று பாரதி பாடுவான். அந்த நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தை தமிழ்த்தாத்தா உ.வே.சா.விற்குக் கிடைப்பதற்குக் காரணமாக இருந்தது நம்முடைய குன்றக்குடி ஆதீனம். கறையான்களுக்கு இரையாகிக் கொண்டிருந்த ஓலைச் சுவடிகளையெல்லாம், பரண்களில் உறங்கிக்கொண்டிருந்த தமிழ்ச்சுவடிகளையெல்லாம் வீடு வீடாய்த் தேடிச் சென்று, ஏடு தேடும் காதலனாய் ஒவ்வொரு வீட்டிலும் அறிவுப்பிச்சை எடுத்தார் தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள். இப்படி அவர் தமிழ்ச் சுவடிகளைத் தேடிப் பயணமாக வந்தபோது, தமிழ்ப் பயணமாக ஞானக் கருவூலங்களைத் தேடுகிற பயணமாகக் குன்றக்குடிக்கு வந்தார்.

குன்றக்குடி ஆதீனத்தில் சின்னப்பட்டமாய் இருந்த ஆறுமுக தேசிகர் அவருடைய அன்பு நண்பர்.

அவரோடு கலந்துரையாடி, குன்றக்குடி ஆதீனத்தின் தலைமை காரியஸ்தர் அப்பாப்பிள்ளையை அழைத்துக் கொண்டு மிதிலைப்பட்டிக்குப் போகிறார்கள். அதற்கு முன்பாக குன்றக்குடி ஆதீனத்தில் சிலப்பதிகார மூலத்தையும் மணிமேகலை மூலத்தையும் திருத்தமாக இருந்த அந்தப் பிரதிகளை உ.வே.சா. அவர்களுக்கு அப்பாப்பிள்ளை எடுத்துக் கொடுத்தார்.

"இந்தச் சுவடி எங்கே கிடைத்தது" என்று தமிழ்த்தாத்தா கேட்டதற்கு, "அருகில் இருக்கிற முதலைப்பட்டியில்..." என்று சொன்னார் அப்பாப்பிள்ளை.

"முதலைப்பட்டியா....?" என்று கேட்டதற்கு, "முதலைப்பட்டியல்ல... இப்போது வழங்குகிற பெயர். உண்மைப் பெயர் மிதலைப்பட்டி" என்று சொல்கிறார் அப்பாப்பிள்ளை.

"அந்த ஊருக்குப் போகலாமா..."என்று கேட்டதற்கு, "போகலாம்..." என்று சொல்லி, குன்றக்குடி ஆதீனத்திடம் உத்தரவு பெற்று, அப்பாப்பிள்ளை உ.வே.சா. அவர்களை மிதிலைப்பட்டிக்கு அழைத்துப் போனார்.

அங்கு அழகிய சிற்றம்பல கவிராயர் இல்லம் தமிழ்த்தாயின் ஞானக்கோயிலாய் விளங்குகிறது. அங்கிருக்கிற ஓலைச்சுவடிகளை எல்லாம் பார்த்து வியந்து போகிறார். கவிராயரின் ஞானக்கூடங்களில் இருக்கிற பல ஞானக் கருவூலங்களைக் கண்டு இரசித்தார். ஒரு ஓலைச்சுவடி குவியலில் புறநானூற்று உரை என்று ஒரு சுவடி இருந்தது. ஆர்வமாய் பிரித்தார். வியந்து போனார். "இவ்வளவு அரிய ஞானக் கருவூலங்கள் இந்தச் சிறிய மிதிலைப்பட்டிக் கிராமத்தில் கிடைக்கிறதே" என்று அழகிய சிற்றம்பலக் கவிராயர் இல்லத்தில் புறநானூற்று சுவடி மற்றும் பல தமிழ்ச்சுவடிகளையும் பெற்றுக்கொண்டார். "இந்த இடத்தை விட்டு வருவதற்கு எனக்கு மனமே இல்லை. தமிழ்நாட்டில் எவ்வளவோ புண்ணியத் தலங்கள்

இருக்கின்றன. சிவத்தலங்கள். விஷ்ணு தலங்கள், சுப்பிரமணியர் தலங்கள் என்று பல உள்ளன. அவற்றைப்போல, தமிழ்த்தெய்வம் கோயில் கொண்ட தலங்களில் ஒன்றாகவே மிதிலைப்பட்டியை நான் கருதியிருக்கிறேன் என்று உ.வே.சா. எழுதுகிறார். நம் குன்றக்குடி ஆதீனம் உ.வே.சா. அவர்களுக்கு சிலப்பதிகாரம் மற்றும் புறநானூற்றுச் சுவடிகள் கிடைப்பதற்கு மூலமும் முதலுமாய் விளங்கியிருக்கிறது. இந்த மண்ணிலே தான் அள்ளக்குறையாத ஞானக்கருவூலங்கள் தமிழ்கூறும் நல்லுலகத்திற்குக் கிடைத்திருக்கின்றன.

கோடி கொடுத்தவர், குடியிருந்த வீடும் கொடுத்த விழுத்தெய்வம் வள்ளல் அழகப்பர் என்று போற்றப்படுகிறார். ஏன்?

தன் சொந்த ஊரில் ஏழைப் பிள்ளைகள் படிக்கிற பள்ளிக்குக் கட்டிட வசதி இல்லை. பல இலட்சம் பெருமானம் உள்ள ஒரு மாளிகை போன்ற, அரண்மனை போன்ற, கலைநயம் மிக்க தனது வீட்டை அந்த ஏழைப் பிள்ளைகள் படிப்பதற்கு அந்தக் கட்டிடத்தை அரசுக்குத் தானமாக வழங்கினார். ஏழைப் பிள்ளைகளின் கல்வி வெளிச்சத்திற்குக் கண் திறந்த வள்ளல் அழகப்பர் தன் சொந்த வீட்டைத் தானமாக வழங்கியதால் தான் கோடி கொடுத்தவர். குடியிருந்த வீடும் கொடுத்த விழுத்தெய்வம் என்று வள்ளல் அழகப்பர் போற்றப்படுகிறார். இது மட்டுமா?

ஏழைப்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு அவர் அள்ளி வழங்கிய நிதியின் பட்டியல் ஏராளம். நாடு விடுதலை அடைந்த தருணம். எங்கும் கல்வி வெளிச்சம் தேவை என்ற முழக்கத்தை கல்வியாளர்கள் விதைத்தார்கள். இங்கிலாந்து போன்ற நாடுகள் இந்தியாவை அடிமை நாடாக நடத்துவதற்கான அடிப்படைக் காரணம் கல்வியறிவின்மைதான் என்று கல்வியாளர்கள் உரைத்தார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்தின் அந்நாளைய துணைவேந்தர் ஏ.இலட்சுமணசுவாமி முதலியார் அவர்கள் ஒரு கூட்டத்தில் உரையாற்றுகிறார்.

"இந்தியா விடுதலை அடைந்து விட்டது. சுதந்திர இந்தியாவில் கிராமப்புற மக்கள் கல்வி பயில்வதற்கு செல்வார்கள்,

வசதியானவர்கள், பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் உருவாவதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தரவேண்டும். கல்வி நிலையங்களை உருவாக்க முன்வரவேண்டும்" என்று வேண்டுகோள் விடுக்கிறார்.

அந்தக் கூட்டத்தில் அமர்ந்திருந்த அழகப்பர் தானே எழுந்து, துணைவேந்தர் பேசிக்கொண்டிருக்கையில் இடைமறித்து கிராமப்புறங்களில் கல்வி உருவாக்க வேண்டும் என்பதை நனவாக்க, காரைக்குடியில் கலைக்கல்லூரி உருவாக ரூபாய் ஒரு இலட்சம் நன்கொடையை அளிக்கின்றார்.

அன்ன சத்திரங்கள் கட்டுவதும், ஆலயங்கள் எழுப்புவதுமே கோடிப் புண்ணியம் என்று நம்பிக் கொண்டிருந்த சமூகத்தில் அதைவிட கோடி புண்ணியம் உண்டு. அது ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்று சொன்ன பாரதியின் வாக்கை நனவாக்கிக் காட்டுகிறார் வள்ளல் அழகப்பர். வள்ளல் அழகப்பர் தன்னுடைய செல்வத்தை எல்லாம் கல்விக்கு வாரி வழங்குகிறார்.

இந்தியாவின் நாடாளுமன்றத்தில் நேரு பெருமான் அறிவிக்கின்றார். எந்த மாநிலம் பதினைந்து இலட்சம் ரூபாய் ரொக்கப் பணத்தையும், முந்நூறு ஏக்கர் நிலத்திற்கு உரிய ஆவணத்தையும் வழங்குகிறதோ அங்கு ஒரு அறிவியல் ஆராய்ச்சிக் கூடம் அமையும் என்று அறிவிக்கிறார்.

நேரு பெருமான் அறிவித்த அடுத்த நொடியிலேயே டில்லிக்குப் பயணித்து, நேரு பெருமான் வீட்டுக் கதவைத் தட்டி, பதினைந்து இலட்சம் ரூபாய் ரொக்கப் பணம், முந்நூறு ஏக்கர் நிலத்திற்கு உரிய ஆவணத்தோடு சென்று தந்து மத்திய மின்வேதியியல் ஆய்வகம் காரைக்குடியில் உருவாவதற்குக் காரணமாக இருந்தார். அதனால் தான், நேரு பெருமான் வள்ளல் அழகப்பரை "சமதர்ம முதலாளி" என்று அன்போடு அழைத்தார். இந்தியாவில் ஒரு சிறிய கிராம நகரம் காரைக்குடி. அந்த நகரத்தில் இன்றைக்குத் தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை ஒரு அறிவியல் ஆராய்ச்சிக் கூடம், பொறியியல் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி என அனைத்தும் ஏழைமக்களுக்கான கல்வி நிறுவனங்கள், அவற்றுள் மணிமகுடமாய்

மத்திய மின் வேதியியல் ஆராய்ச்சிக்கூடம், இந்தியாவில் ஒரு ஆராய்ச்சிக்கூடம் தனிமனிதக் கொடையில் தொடங்கப்பட்டது. என்றால், காரைக்குடி மத்திய மின் வேதியியல் ஆய்வகம் ஒன்றுதான்.

கல்லும், முள்ளும் நிறைந்த இந்தக் களர் நிலத்தை, காரைக்குடி நகரைக் கல்வி நகரமாக மாற்றிக் காட்டிய பெருமை கருணை வள்ளல் அழகப்பரையே சாரும். அவர் கொடைக்கு ஈடில்லை. இணையில்லை. குறிப்பாக, அவர் ஜுபிடர் ஏர்வேஸ் என்ற விமானப் போக்குவரத்தை நடத்தி வந்தார். அதை வெறும் வணிக விமானப் போக்குவரத்தாக நடத்தாமல், தேசம் போரைச் சந்தித்தபோது, இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் காஷ்மீர் பிரச்சனை ஏற்பட்டபோது, அந்தப் போரில் நம்முடைய போர்வீரர்களுக்கான மருந்தையும், உணவையும் வழங்குவதற்கு தன் ஜுபிடர் ஏர்வேஸ் விமானத்தை வழங்கினார். அதன் டகோடோ விமானம் பயணிக்கிறபோது, ஒரு மலைமுகட்டில் மோதி பெரிய விபத்தைச் சந்திக்கிறது. பலகோடி இழப்பு ஏற்பட்டது. ஆனால், இழப்பைப் பற்றிக் கவலைப்படாமல் தொடர்ந்து அவருடைய விமானப் போக்குவரத்து இந்தியத் தேசிய இராணுவத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. வள்ளல் அழகப்பரின் நாட்டுப்பற்றிற்கு ஈடில்லை. இணையில்லை.

அதுமட்டுமல்ல. அவர் எப்படி கொடையில் விஞ்சியிருந்தாரோ, அப்படித் தன்மானத்திலும் விஞ்சி நின்றார். ஒருமுறை மும்பைக்குப் போகிறார். மும்பையில் ரிட்ஸ் என்ற விடுதி பணக்காரர்கள் தங்குவதற்கென உள்ளது. சாதாரண எளிய தோற்றத்தில் அடக்கமே உருவான வள்ளல் அழகப்பர் அந்த விடுதியில் தங்குவதற்கு ஒரு அறை கேட்கிறார்.

மேலாளர் அலட்சியத்தோடு "உனக்கெல்லாம் இங்கு அறை கிடையாது" என்கிறார்.

விடுதியை நான்குபுறமும் தன் கண்களால் அளந்து விட்டு, "இங்கு எத்தனை அறைகள் இருக்கிறது" எனக் கேட்டார்.

மேலாளர் எகத்தாளமாய், ஏளனமாய் "ஏன்...? இந்த விடுதியை விலைக்கு வாங்கப் போறியா..." உனக்கெல்லாம் இங்கு அறை கிடையாது போ...! எனச் சொல்லி விட்டார்.

எதுவும் பேசவில்லை வள்ளல் அழகப்பர். விருட்டென்று வேகமாக அந்த ரிட்ஸ் விடுதியின் முதலாளி வீட்டிற்குப் நேரில் போனார்.

"உங்க ஹோட்டலை எனக்கு விலைக்குத் தாருங்கள்" என்றார் அவரைப் பார்த்ததும் பதறி விழுந்து வணங்கி எழுந்து நிற்கிறார் அந்த முதலாளி.

"உங்க ஹோட்டல் எனக்கு இப்போதே வேண்டும். எவ்வளவு பணம் வேண்டுமோ இதோ இந்த வெற்றுக் காசோலையில் நிரப்பிக் கொள்ளுங்கள்" என்று காசோலையைத் தந்தார்.

அவர் கேட்ட தொகையை உடனே காசோலையில் பூர்த்தி செய்து கொடுத்தார் வள்ளல் அழகப்பர்.

அந்த முதலாளி உடனே ஹோட்டலின் மேலாளரை வரவழைத்து, உடனே அந்த ஹோட்டலின் சாவிகள் அனைத்தையும் வள்ளல் அழகப்பரிடம் ஒப்படைக்கச் சொன்னார்.

அவர் சொன்னவுடன், அதைக் கேட்டு வந்த வள்ளல் அழகப்பரிடம் விழுந்து வணங்கி "ஐயா... மன்னித்து விடுங்கள்..." என்று கதறினார் மேலாளர்.

"யாரையும் மதிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். உருவத்தைக் கண்டு கேலி பேசாதீர்கள். உன்னுடைய ஆணவத்தால் இந்த ஹோட்டலுக்கு நான் எவ்வளவு பெரிய தொகையைக் கொடுத்திருக்கிறேன் பார்... இனி யாரையும் இப்படி அலட்சியப்படுத்தாதே... அவமானப்படுத்தாதே..." என்று அறிவுரை சொல்லி, விடுதியின் சாவியை அவரிடமே கொடுத்து, "நீயே மேலாளராய் தொடர்ந்து பணி செய்..." என்று சொல்லிவிட்டுப் போனார்.

வள்ளல் அழகப்பருக்கு வாரி வழங்குகிற வள்ளல் தன்மையும் உண்டு. தன்மானத்தின், சுயமரியாதையின் உச்சமும் உண்டு.

ஒருமுறை இரயில்வே கேட் அடைக்கப்பட்டிருந்த போது, அவருடைய கார் நிற்கிறது. அப்போது ஒரு முதிய ஏழை மூதாட்டி நண்பகல் வெய்யிலில் வாடாத வெள்ளரிப் பிஞ்சுகளை வாங்கிக் கொள்ளும்படி வாடிய முகத்தோடு அழகப்பரிடம் கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்கிறார்.

"மகராசா... இன்னைக்குப் பொழைப்பே நடக்கல... உன்னத்தான் நம்பியிருக்கேன்... இந்த வெள்ளரிப் பிஞ்சுகளை வாங்கிக்கோ மகராசா... காலணாவுக்கு வாங்கிக்கோ... தர்மதுரை...." என்று கேட்கிறாள்.

உடனே கண்ணாடிக் கதவுகளை இறக்கிவிட்டு அந்தக் கருணையின் கரம் அந்த வெள்ளரிப் பிஞ்சுகளை வாங்குகிறது. காலணா வெள்ளரிப் பிஞ்சுகளைக் கொட்டுகிறாள் அந்த மூதாட்டி. கைநிறையக் கொட்டுகிறாள்.

அழகப்பர் முழு நூறு ரூபாய்த் தாளைக் கிழவியின் கையில் திணிக்கிறார்.

"ஐயோ... மகராசா... இந்த முழு நூறு ரூபாய்த் தாளுக்கு நான் எங்கிருந்து சில்லரை கொடுப்பேன்..." இந்த நோட்டையே இன்னைக்குத்தான் என் ஆயுசில் பார்க்கிறேன்... என்றாள்.

"நீயே வைச்சுக்கோ..." வள்ளல் அழகப்பர்.

அப்படியே அந்தக் கருணைக் கரத்தைக் கண்களால் ஒற்றிக்கொண்டு, வெள்ளரிப் பிஞ்சுகளை அங்கிருந்த சின்னஞ்சிறிய குழந்தைகளுக்கெல்லாம் வாரி வாரி வழங்குகிறார் அந்த மூதாட்டி.

"என்ன... நீயும் கொடுக்கிறியே..."அழகப்பர் கேட்டார்.

"மகராசன் வள்ளல் கைபட்ட காசு எங்கிட்ட வந்ததால் எனக்கும் அந்த வள்ளல் தன்மை வந்துவிட்டது..." என்று அந்த மூதாட்டி கண்ணீர்விட்டுச் சொன்னார்.

இப்படி அழகப்பர் ஏழைமக்கள் மீது பாசம் காட்டிய நிகழ்வுகள் ஏராளம்.

எப்போதும் கல்லூரியில் குடும்ப உறவுகளோடு அவ்வப்போது விருந்துகளை நடத்துவார். அப்படி நடத்துகிறபோது, கல்லூரியின் அனைத்துப் பணியாளர்களும் இருக்கிறார்களா? எனக் கண்கள் அலைபாயும்.

ஒருநாள் கல்லூரி விருந்தில் இரண்டு பேர் வரவில்லை. கழிப்பறைத் தூய்மை செய்கின்ற கடைநிலை ஊழியர்கள் இரண்டு பேரையும் தேடுகிறார்.

"சுப்பையா, கருப்பன் என்ற அந்த இரண்டு ஊழியர்கள் எங்கே?" எனக் கேட்டார்.

அவர்கள் வீட்டிலிருக்கிறார்கள். அவர்களுக்கு விருந்து எனத் தெரியாது என்றவுடன் தன்னுடைய காரைக் கொடுத்து அவர்களை அழைத்துவரச் சொல்கிறார்.

அவர்களைத் தேடி குடிசைப் பகுதிக்குள் கார் போனது. குடிசைக்குள்ளிருந்து அந்தப் பணியாளர்கள் வருகிறார்கள்.

"ஐயோ... நாங்கள் ஓடியே வருவோம். முதலாளி காரில் ஒரு போதும் ஏறமாட்டோம்..." என்று அவர்கள் மறுத்தார்கள். ஓட்டுநர் விடவில்லை.

"உங்களுக்காக ஐயா சாப்பிடாமல் காத்திருக்கிறார். எல்லோரும் காத்திருக்கிறார்கள். நீங்கள் வந்தால்தான் அங்கே விருந்து, அதனால் காரில் ஏறுங்கள்...." என்று கெடுபிடி செய்கிறார் ஓட்டுநர்.

கடைசியில் அவர்கள் காரின் டிக்கியில் அமர்ந்து வர ஒத்துக் கொள்கிறார்கள். அவர்கள் வந்தபிறகுதான், அழகப்பர் விருந்தைத் தொடங்கினார்.

இப்படி ஏழைமக்கள் மீது அவர் காட்டிய அன்பின் காரணமாகத்தான் "சமதர்ம முதலாளி" என்று அழைக்கப்பட்டார். நேருவின் அந்த வார்த்தை அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமைந்திருந்தது. இப்படி நிறையச் செய்திகள் உள்ளன.

வள்ளல் அழகப்பரின் கொடையைப் பற்றிச் சொல்வார்கள். வள்ளல் அழகப்பர் எல்லாவற்றையும் வாரிக் கொடுத்தார். கொடுப்பதற்காகவே இறைவன் அவருக்குக் கைகளைக் கொடுத்திருந்தார்.

வள்ளல் அழகப்பர் எல்லாவற்றையும் வாரிக் கொடுத்தார். அவர் எப்படிக் கொடுத்தார் என்ற ஒரு கவிதை நம் கண்களில் கண்ணீர் வரச்செய்கிறது. கவியரசர் முடியரசன் பாடிய கவிதை.

அழகப்பர் அள்ளி அள்ளி வழங்க கையைத் தந்தார். அழகாய்ப் பேசுவதற்கே வாயைத் தந்தார். எல்லோருக்கும் வாரி வழங்குவதற்காக உள்ளத்தில் துணிவைத் தந்தார். மனத்துணிவிற்காகவே அவர் உள்ளத்தைப் பெற்றார். அவரது உடம்பைக் கொடுநோய்க்குத் தந்தார். வந்த செல்வத்தையெல்லாம் ஏழைமக்களின் கல்விக்குத் தந்தார். கொடுப்பதற்கு ஒன்றுமில்லை என்றபோதும், உயிர் இருக்கிறதே என்று சாவுக்குத் தன் உயிரைத் தந்தார்.

“அள்ளிக் அள்ளி வழங்குதற்குக் கையை ஈந்தான்
அழகாகப் பேசுவதற்கு வாயை ஈந்தான்
உள்ளம் எனும் ஒரு பொருளை உரத்துக்கு ஈந்தான்
உடம்பினையும் கொடு நோய்க்கே ஈந்தான் அந்தோ!
வெள்ளம் எனவரு நிதியும், வாழும் வீடு
வினைமுயற்சி அத்தனையும் கல்விக்கு ஈந்தான்
உள்ளது என ஒன்றில்லை அந்தப் போதும்
உயிர் உளதே கொள்கஎனச் சாவுக்கு ஈந்தான்”

என்ற கவிதை வரிகள் கண்களை மட்டும் குளமாக்கவில்லை. இதயத்தையும் குளமாக்கிவிட்டது. இதயத்தை ஈரப்படுத்துவது மட்டுமல்ல இந்தக் கவிதை வரிகளின் நோக்கம். எல்லோரும் தம்மிடம் இருக்கும் செல்வத்தில் கொடுப்பார்கள். அழகப்பரோ வாரிக் கொடுத்துவிட்டு செல்வத்தைத் தேடுவார். வள்ளல் அழகப்பரின் உண்மையான கொடைத் தன்மையை உலகம் அறிய வேண்டும் என்பதே இதன் நோக்கம்.

செட்டிநாட்டுப் பகுதி தமிழ் உணர்வால், தமிழ்மொழி வளர்ச்சியால், தமிழ்ப் பண்பாட்டால் தமிழர் நாகரிகத்தால் உயர்ந்த மண் மட்டுமல்ல வீரமிக்க தமிழர்கள் வாழும் மண். நெஞ்சில் ஈரமிக்க தமிழர்களும் வாழும் மண். வீரமும், நெஞ்சில் ஈரமும் ஒருங்கே கொண்டு தமிழர் பண்பாட்டின் மணிமுடியாய் விளங்குகிற தாய்மண் இது. இந்தத் தாய் மண் நாம் வணங்குகிற தமிழ் மண் என்பதை மறந்துவிட வேண்டாம்.

சைவமும், தமிழும் வளர்த்த பக்தித் தமிழின் உறைவிடம். வாடிய முல்லைக்கொடிக்கு தேர் ஈந்த ஈரமும், முற்றுகையிட்ட மூவேந்தரை எதிர்த்துப் போரிட வீரமும் நிறைந்த பூமி. வெள்ளை ஏகாதிபத்தியத்தை வீரத்தோடு எதிர்த்துப் போரிட்ட சுதந்திர பூமி. இசையோடு இன்பத்தமிழை இணைத்து வளர்த்த இன்பத்தமிழ் பூமி. ஏழைகளுக்கு அள்ளிக் கொடுத்த வள்ளல்கள் நிறைந்த பூமி. தேடிய செல்வத்தையெல்லாம் கல்விக்குத் தந்த கருணை பூமி இது.

"செட்டிநாடு எனும் போதினிலே இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே"

(கையொப்பம்)

நீ வாழ்க்கையை நேசிக்கிறாயா? அப்படியானால் நேரத்தை வீணாக்காதே. ஏனெனில் வாழ்க்கை நேரத்தினால் உருவாக்கப்பட்டிருக்கிறது.

"நேரத்தைச் சரியான முறையில் பயன்படுத்தி வாழ்வில் முன்னேற்றம் கண்ட முன்னோடிகள் பலர். வாழ்வில் நேரத்தைச் சிறிதும் வீணாக்காமல் திறமையோடு பயன்படுத்தியவர்களே பல சாதனைகளைப் புரிந்திருக்கிறார்கள். இவர்களைத்தான் வரலாறு இன்றும் நினைவு கூர்கிறது". - பெஞ்சமின் ஃப்ராங்க்ளின்

திருவண்ணாமலை ஆதீனம்
45ஆவது குருமகாசந்நிதானம்
திருப்பெருந்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகபரமாச்சாரிய சுவாமிகள் (தவத்திரு குன்றக்குடி அடிகளார்) அவர்களின்
24-ஆம் ஆண்டு குருபூசை விழா



குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம் 45ஆவது குருமகாசந்நிதானம் திருப்பெருந்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (தவத்திரு குன்றக்குடி அடிகளார்) அவர்களின் 24ஆம் ஆண்டு குருபூசை விழா திருவள்ளுவராண்டு 2050 (விகாரி ஆண்டு சித்திரைத் திங்கள் 6ஆம் நாள்) 19.4.2019 ஞாயிற்றுக்கிழமையன்று குன்றக்குடியில் சிறப்பாக நடைபெற்றது.

அன்று காலை 7.30 - 8.30 மணியளவில் அருள்தரு காளத்திநாதர் சிறப்பு வழிபாடும் பின் அருள்தரு சண்முகநாதப் பெருமான் வழிபாடு பகல் 12 மணியளவில் திருப்பெருந்திரு 45ஆவது குருமகாசந்நிதானம் அவர்களின் குருமூர்த்த வழிபாடும் சிறப்பாக நடைபெற்றன.

முற்பகல் 10-12 மணியளவில் திருவருள்திரு குருமகாசந்நிதானம் அவர்கள் தலைமையில் ஆதீனப்புலவர் திரு.கதிரேசன் அவர்களுக்கு **தவத்திரு குன்றக்குடி அடிகளார் விருது வழங்கும் விழா** நடைபெற்றது. திருவருள்திரு குருமகாசந்நிதானம் அவர்கள் விருது வழங்க அருள்திரு கோவிந்தானந்த சுவாமிகள், விஞ்ஞானி டாக்டர்.திரு.கே. பாலகிருஷ்ணன், த.க.கு.பெண்கள் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிச் செயலாளர் டாக்டர்.திரு.எஸ்.மோகன் ஆகியோர் பாராட்டுரை வழங்க, விழா இனிதே நிறைவெய்தியது.

மதியம் மாகேசுவர பூசை நடைபெற்றது.

திருவாசக உவமைகள்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

ஐயோ பாவம்!

ஒரு சிலருக்குப் பிறப்பின் சார்பினாலே பெருந்தன்மை பெருங்குணம் முதலியன இயல்பிலேயே அமைந்து கிடக்கின்றன. ஒரு சிலர் மேற்கூறிய நல்லியல்புகளைப் போராடிப் பெறுவார்கள். இன்னும் ஒரு சிலர் அற்பத்தனத்திலேயே பிறந்து அற்பத்தனத்திலேயே வாழ்ந்து வாழ்ந்து, அற்பத்தனத்திலேயே வாழ்க்கையை முடித்துக் கொள்ளுவார்கள். அவர்கள் சிறியவர்கள் - அற்பர்கள். அவர்களுக்கு - இக்கடை இனத்தார்க்கு நலன் தெரியாது; அவர்கள் நலன் நினைக்க மாட்டார்கள்; நலன் செய்ய மாட்டார்கள். "சிறுமை பொருந்திப் பெருமை முடங்கிக்" காட்சி தருவார்கள். செயலற்று அற்பமாக ஏமாற்றியும் புறம் சொல்லியும் வாழ்வார்கள். ஆக்கத்தில் வாழத் தெரியாமல் அழிவில் ஆதாயம் எடுப்பார்கள். எரிகின்ற பிணத்தை நரி பிடுங்குவது போல, இத்தகையோர் பரிதாபத்திற்குரியவர்கள். இந்த வரிசையைச் சார்ந்த மக்களை மாணிக்கவாசகர் ஒரு சிறந்த உவமையால் விளக்குகின்றார்.

கடலில் தண்ணீர் நிறையக் கிடக்கின்றது. நாய் நிற்பதோ கடற்கரை. நாய்க்கு மிகுதியான நீர்வேட்கை. நாவறண்டு தொங்க அது நீரைத் தேடிக் கடற்கரைக்கு வந்தது. நிறையக் குடிக்க வேண்டும் என்ற ஆசை. தேவையும் கூட. கடலிலும் தண்ணீர் நிறைந்து கிடக்கின்றது. எனினும் அது நக்கியே குடிக்கின்றது. அது போலவே சிலர் நல்ல இடத்தில் இருப்பார்கள் - அவர்களுக்குத் தேவையும் ஆசையும்கூட நிறைய இருக்கும். எனினும், அற்பத்தனமாகவே பிழைப்பு நடத்துவார்கள்.

இறைவனுடைய திருவருளால் இந்த உலகம் இயங்குகின்றது. அவனுடைய திருவருள் வைப்பின் காரணமாக எத்தனையோ கோடி இன்பங்கள் இந்த உலக அரங்கில் நிரம்பிக் கிடக்கின்றன. எனினும், மனிதர்கள் உழைத்து இன்பத்தைப் பெற முயற்சிப்பதில்லை. அற்பமாகவே நடந்து கொள்ளுகிறார்கள். இறைவனையும் எண்ணிப் பார்ப்பதில்லை. நாய் கடல் நீரை நக்கிக் குடிப்பது போலவே, மனிதர்களில், பலரும்

திருவருளின்பம் மலிந்து கிடக்கும் இந்த உலகியலில் நக்கி வாழும் சிறுமையைச் செய்கிறார்கள் என்று கூறுகின்றார் மாணிக்கவாசகர்.

கடலில் நாய் நக்கிக் குடித்தல் இயற்கை. அது மாற்றமுடியாத ஒன்று. ஆனால், மனிதனின் இயற்கை பெருந்தன்மைக்குரியது. மனிதனின் வாழ்க்கையில் சிறுமை இருப்பது இயற்கைக்கு முரண்பட்டது. செயற்கையும் கூட என்ற குறிப்பையும் அவர் உணர்த்துகின்றார்.

நாய்க்கோ நீர் வேட்கை - வேட்கையைத் தணித்துக் கொள்ள அது கடற்கரையினருகிலுள்ள சிறிய தெண்ணீரூற்றுக்களுக்குப் போகாமல் ஆசை மிகுதியால் நிறை நீர்ப்பரப்புள்ள கடலையே நோக்கி வந்திருக்கிறது. கடல் நீரோ உப்பு நீர். நக்கித்தான் பார்க்க முடிந்ததே தவிர குடிக்க முடியவில்லை. வேட்கையைத் தணித்துக் கொள்ள முடியவில்லை. அதுபோல மனிதர்கள் பேராசையின் காரணமாக - அற்பத்தனங்களின் சின்னமாக தீமைக் கடல்களையே நாடுகின்றார்கள். எனினும் அவர்களால் முடிவதில்லை என்ற கருத்தையும் மாணிக்கவாசகர் உணர்த்துகின்றார்.

"ஒன்று பரம்பொருள் - நாமதன் மக்கள் - உலகின்பக் கேணி" என்ற பெருவட்ட நோக்கோடு ஒருவரோடொருவர் ஒத்தும், ஒத்துழைத்தும் வாழ்ந்தால் நினைத்தவை கைகூடும் - இன்பமாக வாழலாம் - இறையருளைப் பெறலாம் என்பது மாணிக்கவாசகரின் கருத்து. இதோ பாடலைப் பாருங்கள்.

"கடலினுள் நாய்நக்கி யாங்குன்
கருணைக் கடலினுள்ளம்
விடலரி யேனை விடுதிகண்
டாய்விட லில்லடியார்
உடலில மேமன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
மடலின்மட் டேமணி யேயமு
தேயென் மதுவெள்ளமே!"

ஆன்மாவும் கொடியும்

உலகியலில் எந்த ஒன்றும் தனித்து இருப்பதில்லை. தனித்திருப்பது வளர்ச்சிக்கு இடையூறு - முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை. இதே தத்துவம்

சமய இயலுக்கும் பொருந்தும். உயிர் தனித்திருப்பதில்லை. உயிருக்குச் சார்பின்றித் தனித்திருக்கும் இயல்பும் ஆற்றலும் இல்லை. ஒன்று, உலகப் பொருள்களைச் சார்ந்து அவற்றை அனுபவிக்க வேண்டும்; அல்லது, இறைவனுடைய திருவருளைச் சார்ந்து திருவருளின்பத்தை அனுபவிக்க வேண்டும். இஃது உயிரின் இயற்கை. உயிர் திருவருளைச் சார்ந்திருப்பது இத்திருத்தத்திற்கும் உய்திக்கும் வழி வகுக்கிறது. அப்படியின்றி உலகியலை மட்டும் சார்ந்திருப்பது துன்பத்திற்குக் காரணமாக அமைகின்றது. உலகியல் வசப்பட்ட உயிர் எரியுள் அகப்பட்ட கட்டைப் போல அழிக்கப்படுகிறது. திருவருட் சார்பினைத் தழுவிய உயிர், விளையும் நிலத்திலே இட்ட வித்துப்போல விளைகின்றது - பயன் தருகின்றது. முன்னைய வாழ்க்கையை நினைந்து நொந்து மாணிக்கவாசகர் பாடும் இடங்கள் பற்பல!

தனியனேன் பெரும்பிறவிப்
பௌவத் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு
பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயார்
என்னுங் காலால்
கலக்குண்டு காமவன்
சுறவின் வாய்ப்பட்டு
இனியென்னே உய்யுமாறு
என்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக்
கிடக்கின் றேனை
முனைவனே முதலந்தம்
இல்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய்
மூர்க்க னேற்கே!

என்ற பாடல் இதற்கு எடுத்துக்காட்டு. "தனியேனன்" என்று குறிப்பிடுவது திருவருட் சார்பின்றி உயிர் தனித்திருக்கும் நிலையினையேயாம். உயிர் எந்த ஒன்றையாவது சார்ந்து தானே இருக்கும். அப்படியிருக்கத் "தனியனேன் என்று கூறுவானேன்" உயிர் திருவருட் சார்பின்றி உலகியல் சார்பில் வாழ்வது உண்மைதான். ஆயினும், பயன்தராத சார்பைச் சார்பென்று கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாது. அந்தத் துணை

இருந்தும் இல்லாதது போலவே! ஆதலால், "தனியனேன்" என்று குறிப்பிடுகின்றார். அதுவும் மயக்க உணர்வில் துணை என எடுத்துக்கொண்ட ஒன்று தன்னையே திரும்ப அழிக்க முற்படும்பொழுது அந்த உயிருக்குத் துணை நிற்பார் யாருமில்லை. அந்தக் கால கட்டத்தில் உயிர் தனித்தே நிற்க வேண்டியிருக்கிறது. இந்த அழகான தத்துவத்தை ஒரு சீரிய உவமையின் மூலம் மாணிக்கவாசகர் எடுத்துக்காட்டி விளக்குகின்றார்.

கொடிகள் படர கொம்புகள் தேவை! கொம்பில் ஏறிப் படரும் கொடியே வளமாக இருக்கும். பூக்கும், மணக்கும் அங்ஙனம் படர்வதற்குக் கொம்பு கிடைக்காத கொடி தரையில் படரும். கொம்பில் படர்வதைப் போல தரையில் பிண்ணிப் பிணைந்து அடர்ந்து படராது. நரைத்து நலிந்து காட்சியளிக்கும். பூக்கவும் செய்யாது. மணக்கவும செய்யாது. ஆதலால், செடி கொடி வளர, மலர, மணம்வீச, காய்கனிகளாகிய பயனைத் தர கொம்பு தேவை. அங்ஙனம் கொம்பின்றி வாடிய முல்லைக் கொடியின் இயல்பறிந்துதானே பாரி முல்லைக்கொடி படரத் தேரை நிறுத்தினான்! பற்றிப் படரக் கொம்பு கிடைக்காத கொடி படராமல் கிடந்து அழியும். உயிர்க்கொடி – உயிருக்குப் பற்றுக்கோடாக இருக்கிற இறைவனுடைய திருவருள் கொம்பு இறைவனின் திருவருளைச் சார்பாகக் கொண்டு தழுவி வாழும் உயிர் சிவஞானம் மணக்கும். திருவருட்சார்பு கிடைக்காமல் ஏமாற்றமடையும் உயிர் அலமந்து அழியும். இதனை, "கொம்பரிலாக் கொடிபோல் அலமந்து? என்று குறிப்பிடுகின்றார். இதனை,

கொம்பரில் லாக்கொடி போல்அல
மந்தனன் கோமளமே
வெம்புகின் றேனை விடுதிகண்
டாய்விண்ணர் நண்ணுகில்லா
உம்பருள் ளாய்மன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
அம்பர மேநில னேயனல்
காலொடப் பானவனே.

இப்பாடலின் மூலம் நாம் உணர்வது கொடிக்குக் கொம்பு இன்றியமையாததுபோல, உயிருக்குத் திருவருட் சார்பு பற்றுக்கோடு. கொடி என்றமையால், கொம்பில் ஏறிப் படர்வதற்கு உரிய தகுதிப்பாட்டை அடைந்த ஒன்றினைத் தான் கொடி என்று அழைப்பது மரபு. படரும் தகுதி பெறாமல் குழியளவிலேயே

இருப்பதையோ அல்லது முளைக்காமல் மட்கி மண்ணில் மறைந்து கிடக்கும் ஒன்றினையோ கொடி என்று குறிப்பிடுவதில்லை. இங்கு கொடிபோல அமந்தனன் என்று உயிரைக் கொடி போல என்று குறிப்பிடுவதால் உயிர் மலநீக்கம் பெற்று திருவருட் சக்தியின் பதிவு பெற்று (சத்தினி பாதம்) இறைவனுடைய திருவருளைச் சார்ந்து நின்று ஒழுகுதற்குரிய தகுதிப்பாட்டை அடைந்திருக்கிறது என்பது பெறப்படுகிறது. கொம்பரில்லாக் கொடி என்ற உவமை அழகிய உவமை! சிறந்த தத்துவ விளக்கத்தைத் தரும் உவமை! நாமும் கொழு கொம்பில்லாக் கொடியாக அலமந்தழியாமல் இறைவனுடைய திருவருட் சார்பெனும் கொம்பினைப் பற்றிப் படர்ந்து உய்தி பெற வேண்டும். கொம்பில் படரும் கொடிகள் தமது மெல்லிய உறுப்புகளால் கொம்பை இறுகச் சுற்றிக் கொண்டு கொம்போடு இணைந்து கொள்வதைப் பார்க்கிறோம். அதுபோல, நாமும், நம்முடைய உயிரை – ஆன்மாவை "கன்றாப் பூர் நடு தறி" என்று அப்பரடிகளால் குறிக்கப்பெறும் கொம்பினைத் தழுவிச் சிக்கெனப் பிடித்துக் கொள்ள வேண்டும். கொம்பினைத் தழுவிய கொடிபோல, இம்மை மறுமை இன்பங்களைப் பெற்றுத் தழைத்து விளங்க முயற்சிப்போமாக!

— — —

அன்பான வேண்டுகோள்!

சமுதாய மாமுனிவராகத் திகழ்ந்த நமது அருள்நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆழமான சிந்தனைகளை அடியொற்றி நடைபோடும் "மக்கள் சிந்தனை" மாத இதழ் மேலும் பலம் பெறுவதற்குத் தங்களின் ஆதரவு தேவை. நமது கருத்து பரவலாக மக்களைச் சென்றடைய இதழ் அவசியம்.

ஆயுள் சந்தாவாகவோ, அல்லது ஆண்டுச் சந்தாவாகவோ அல்லது புரவலர் தொகையாகவோ மக்கள் சிந்தனை இதழுக்கு வழங்கி மக்களின் சிந்தனைகளை அகம்கொண்டு வெளிவர உதவுங்கள். "மக்கள் சிந்தனை"யின் பணி சிறப்புடன் தொடர வாசகராக, படைப்பாளராக சந்தாதாரராக விளம்பரதாரராக மாறுங்கள்; இன்றே சமய சமுதாயப் பணியை வலிமைப்படுத்துங்கள்.

– ஆசிரியர்

பாணபத்திரன் சேரமானிடம் பரிசு பெற்றதன் மூலம்

(குருமையாதீனப் புலவர். தா. குருசாமி தேசிகர்)

பெரியபுராணம், திருவிளையாடற்புராணத்தில் பாணபத்திரன் இறையனாரிடம் திருமுகம் பெற்று சேரமானிடம் பரிசுபெற்று வந்த சம்பவங்களும், சம்பந்தர் அப்பர் படிக்காசு பெற்ற சம்பவங்களும், சுந்தரர்க்கு செங்கல் பொன்னாகப் பெற்ற சம்பவங்களும், சமய குரவர் மூவர் முதலிகளுக்கு உற்றுழி உதவிசெய்த சம்பவங்களும், உலகியலில் வைத்துச் சிந்தனை செய்யும்படி, புறநானூற்றுப் பாடல் ஒன்று அரிய கருத்தை நல்குகிறது.

அலைகடல் ஓரத்தில் பயணம் மேற்கொண்டவர், கடல்நீர் இருப்பினும், கடல் ஓரத்தில் குடியிருப்பவர்களிடம் தாகம் தீர்க்க, சிறிது நீர் வேண்டிக் குடித்து மாந்தர் நிறைவடைவர். அதுபோல, வேந்தரிடத்தராகவும், புலவர்கள், குற்றந் தீர்ந்த வள்ளல்களைப் பொருள் வேண்டிச் செல்வர் என்ற கருத்தில், மோசிகீரனார் புறநானூறு 154ஆம் பாடலில் வழங்கும் வரிகள் எண்ணத்தக்கன.

"திரைபொருமுந்நீர்க் கரைநணிச் செலினும்
அறியுநர்க் காணின் வேட்கை நீக்கும்
சின்னீர் வினவுவர் மாந்தரதுபோல்
அரசருழையராகவும் புரைதபு
வள்ளியோரப் படர்குவர்புலவர்"

என்ற வரிகள் கடல் போன்ற செல்வமுடையவரிடம் பணிசெய்பவர்கள் யாராக இருந்தாலும் அளவோடுதான் பொருள் வழங்குவர். மேலும் வேண்டிய பொருள், சிறிதாக இருந்தாலும், சிறு செல்வரிடம் - வள்ளன்மை உடையரிடம் பெற்று, மற்றவர்க்கு உதவுவர். கடல் உவர் நீர், நீர் நிறைய இருப்பினும் தாகம் தீர்க்குமாறு இராது.

பெருஞ்செல்வரிடம் பணிசெய்பவர்களும் - அரசு உத்தியோகம் பார்ப்பவர்களும், பொருளுக்கு - பற்றாக்குறை காரணமாக - தம்பணி - அல்லது அதிகாரம் மூலமாகப் பொருள் ஈட்டுவதை - அல்லது, கடன்

வாங்குவதை அன்பளிப்பாக என்ற பெயரில், லஞ்சம் பெறுவதை வாழ்வியலில் கண்கூடாகப் பார்க்கிறோம்.

பெரிய நிறுவனங்களில் பல ஊழியர்கள் சம்பளத்துக்கு மேல், அன்பளிப்பு வாங்குவதைப் பார்க்கிறோம். இதனையே புறநானூற்றுப் புலவன், பெரிய நிறுவனங்களை கடல் என்றும், சேவகம் செய்பவர்க்கு மேலும் தேவையாகிய தாகம் தீர்ப்பது, கடல் ஓரம் உள்ள இல்லங்களும் - கிணறுகளும் என்று ஒப்பிட்டுக் காட்டி, பெருஞ்செல்வர்களை நம்பி வாழமுடியாது என்ற கட்டமைத்துள்ள கருத்து, சிந்தனைக்குரியது, இனி, அருளாளர் வாழ்வில் இறைவன் அங்கங்கே வருதை தந்து, நம் சமய குரவர்கட்குப் பசிபோக்கியும் பொன்னும் பொருளும் வழங்கியருளி அவர்கள் தொண்டுகட்கு, அரசர்கள் முழுதும் வழங்க வாய்ப்பில்லாது இருந்த நிலையில், இறைவனை முன்னின்று, பாணபத்திரர்க்கும், தருமிக்கும் உதவிய செயல்திறம் இறைவனின் வள்ளண்மையை உணர்த்தும் - என ஒப்பிட்டு மகிழலாம்.

பெருஞ்சித்திரனார் என்ற புலவர் அரசர்களில் அதியமான் நெடுமானஞ்சி, இளவெளிமான் இவர்களைப் பாடியதற்கு ஏதும் பெறவில்லை. அன்பில்லாதவர்கள், எவ்வளவு செல்வம் உடையவர்களாயிருந்தும், அவர்களால் பயனில்லை என்றும், சிற்றரசனாகிய, குமணவள்ளலைப் பாடிப் பெற்ற செல்வப் பரிசு சிறிது எனினும், பெற்ற அச்செல்வத்தை - பரிசிலை, தன்மனைவியிடம் கொடுத்து, நீ இனிக்கவலையின்றி வாழ் எனக் கொடுத்த பாங்கும், அதனைப் பங்கிட்டுக் கொடுக்க, அன்பொடு உதவிய சொல்லும் புறநானூற்றுள் பதிவாகியுள்ளன. புறம் 163 பாடல், சிறிய சுருக்கத்தும் உயர்பண்பாட்டை உச்சப்படுத்தும். அப்பாடல்:

"நின்னயந்துறைநர்க்கு, நீ நயந்துறைநர்க்கும்
பன்மான கற்பினின் கிளைமுதலோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுஞ்குறியெதிர்ப்பை நல்கிமோர்க்கும்
இன்னோர்க் கென்னாது என்னோடும் சூழாது

வல்லாங்கு வாழ்துமன்னாது நீயும்

எல்லோர்க்குங் கொடுமதி மனைகிழவோயே

பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்

திருந்துவேற் குமணணங்கிய வளனே"

என்ற இப்பாடற் பண்புகள், திருவிளையாடற்புராணத்துள் பாணபத்திரர் சேரமானிடம் பெற்ற அருஞ்செல்வத்தை, மதுரையில் கொண்டுவந்து சொக்கரை வணங்கி, பாண்டியனாகிய - நகருள்ளார் யாரும் அறிய யாவர்க்கும், வேதமுதல்வர்க்கும், புலவோர்தமக்கும், முறையாகக் கொடுத்து - செல்வம் பெற்ற பயனை இசைப்பாணர் வழங்கினர் என்ற சிந்தனையில், இறை சிந்தனையாளர் முன்னிலைப்படுத்தியுள்ளதை அறியலாம். எனவே புறநானூற்றுத் தாக்கமும் வாழ்வியலும் சமயகுரவர் வாழ்வியலிலும், தருமி முதலியவர் வாழ்வியலிலும் சிவம் முன்னிலையில் நின்று அருளிப்பாடு செய்த கட்டமைப்பை ஒப்பிட்டு மகிழலாம். இறைவனும் உலகியலை ஒட்டி அருளிப்பாடு செய்தவை உணரத்தக்கது.

— — — —

பலர் ஒன்று கூடி இணக்கத்துடன் நட்புறவுடன் வாழ்வதே ஒப்பற்ற சமுதாயம். கூடிவாழும் பண்பாட்டுக்குத் தடையாய் எது இருப்பினும் அது வெறுக்கத்தக்கது. இந்திய ஒருமைப்பாட்டைக் கட்டிக் காக்கும் பண்பாட்டுக்குப் பல நற்பழக்கங்கள் தேவை. தன்னிச்சைப் போக்கு தவிர்க்கப்பட வேண்டும். கூடிச் சிந்தனை செய்தல், முடிவெடுத்தல், அந்த முடிவுகளுக்குச் செயலுருவம் கொடுத்தல் தேவை. எந்த வகையிலும் தனிநபர் வழிபாட்டிற்கு இளைஞர்கள் இடம் கொடுத்துவிடக்கூடாது. ஒருவர் எல்லோருக்காவும், எல்லோரும் ஒருவருக்காகவும் என்ற வாழ்வியல் கோட்பாட்டை பின்பற்ற வேண்டும் என்பது நமது விருப்பம்; வேண்டுகோள்.

- அருள்நெறித்தந்தை

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

ஞானாமிர்த சாரம்

குன்றக்குடியில் 29.12.1939இல் நடைபெற்ற சைவசித்தாந்த மகா சமாசக் கருத்தரங்கச் சொற்பொழிவு

(உரைவேந்தர். ஔவை. துரைசாமி பிள்ளை)

சமாசத்தின் சிவநெறிச் சிந்தனை தொகுப்பு நூலிலிருந்து

ஆண்டவன் அருளிய ஆகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பாதமாக நடக்கும் என்றும், ஞானபாதம் பதி, பசு, பாசம் என்பதை உரைப்பது என்றும் நாம் கேட்டிருக்கின்றோம். ஆனால், இந்நூல் "திருமிகு ஞானம், இலங்கொளி யோகம். நலங்கிளர் கிரியை, சரியையென்ற விரிதருபாதம்" நான்கு என்று முறைசெய்து கொண்டு, ஞானபாதத்தைப் பதி பசு பாசம் என்று முறை செய்யாது. பசுவும், பாசமும், பதியும் என்று முறை செய்து கொள்கின்றது. ஞானபாதம் "பசுபாசத்தொடு பதியாய் பெற்றி" என்றே ஆசிரியர் நமக்கு வழங்குகின்றார். பசுவின் இயல்பைப் பத்துப்பாட்டிலும், பாசத்திலும் தனியியல்புகளை ஒன்பது பாட்டுக்களிலும், பசுபாசப் பிணைப்பும் வீடும் முப்பத்தாறு பாட்டுக்களிலும், பதியியல்புகளை இருபது பாட்டுக்களிலும் உரைக்கின்றார். மேலும், இந்நூல், பாயிரம், சம்மிய ஞானம், சம்மிய தரிசனம், பாசபந்தம், தேகாந்தரம், பாசவனாதி, பாசச் சேதம், பதியுண்மை உணர்த்தல், பாசமோசனம் என ஒன்பது வகையாக வகுத்து ஆராயப்பட்டிருக்கின்றது. இனி, அம்முறையைப் பின்பற்றாது. இந்நூலின் சாரத்தையே ஒரு வகைாய்ச் சுருங்கக்கூறி என் சொற்பொழிவை முடித்துக் கொள்கின்றேன்.

இனி, பசு, பாசம், பதி என்ற மூன்றனுள் பசு என்பதும் பதி என்பதும் அறிவுடைய சித்துப் பொருள்களாகும். பசுவை உயிர் என்றும், சீவன் ஏன்றும், ஆன்மா என்றும், பதியை இறைவன் என்றும் சிவன் என்றும் கூறுவர். இவை அனாதியாகவும், நித்தமாகவும் உள்ளனவாகும். முதலாக எடுக்கப்பட்ட சீவன் அனாதியே ஆணவமல சம்பந்தமுற்றுத் தன்னறிவு பெரிதும் மறைப்புண்டு. உரிமை குன்றிப் பிணிப்புடையதாயிற்று. அதனால் இதனை ஆராய்ந்து கண்ட அறிஞர். இதனைப் பசு என்றே கூறலாயினர். பசு என்ற வடமொழிச் சொல்லுக்குக் கட்டப்பட்டது என்பதே பொருளாகும். சீவனைப் பற்றிப் பிணித்து நிற்கும் ஆணவம் மாயை, கன்மம் என்பவைகளைப் பாசம் என்றும் கூறுவர். பாசத்தால் பிணிப்புண்டு

அறியாமை பெரிதும் அறிவு சிறிதும் உடையது பசு என்று கூறுங்கால், அறிவும் அறியாமையும் ஓரிடத்தில் எவ்வாறு நிற்கமுடியும் என்று ஒரு கேள்வி பிறக்கின்றது. அதற்கு, இந்நூலாசிரியர், தீக்கடைக்கோலை எடுத்துக்காட்டி, கடையுங்காறும் கோலோடு கிடந்து, கடைந்தவழிப் பிறந்து, அதனையே அதனையே அழிக்கும் தீப்போல, அறிவும், அறியாமையோடு விரவிக்கிடக்கிடந்து, பக்குவம் வந்தவழித் தான் விளங்கித் தோன்றி அறியாமையை அழித்து உண்மை அறிவாய்த் துலங்கும் என்பார்.

"ஒல்லா வல்லழல் போல, நல்லோய்!
ஞானமும் இன்மையும் நலம்மிக்கு
ஆனா உயிர்கட்கு உணர்வு அனைவகையே" (ஞானா-70)

என்று கூறுகின்றார்.

இனி, பதிப்பொருளாகிய சிவன். சீவன்களைப் போல மலப்பற்று இல்லாத அறிவுப் பிழம்பாகும். ஆயினும், சீவன்கபைப் போலச் சித்துப் பொருளாகிய இது. மலமில்லாமலும், சீவன்கள் மலமுடையனவாயும், இருப்பதற்குக் காரணம் கூறுவர். பளிங்குக்கு ஒளியும், செம்பிற்குக் களிம்பும்போல் இவை அனாதி என்றும், இஃது ஆன்றோர் அறிந்துரைத்த அருண்மொழி என்றும் கூறுகின்றார்.

"அம்ம சீருணம்
திகழொளிப் பளிங்கு போலப் புகலரும்
இறை புற்கலனுக்(கு) என்றனன் குறைவின்று
அறைகழல் அருளொலி பரந்த
பொறைவளர் சாரல் அறவ னோனே? - ஞானா-9

என்பதனால் இது விளங்கும்.

இவ்வாறு, அனாதியே மலசம்பந்தமுற்றுப் பசுவாகிய உயிர்பால், அருள்மிகக் கொண்ட பரமனுக்கு அதனை அப்பிணிப் பினின்றும் விடுவிக்கவேண்டுமென்ற திருவுள்ள முண்டாகின்றது. அவன் எல்லா வல்லமையையும் உடையவனாதலால் தன் சக்தி சங்கற்பத்தால் மாயையைக் கலக்கி அதனால் உடல், கருவி, உலகு, நுகர்ச்சி எனப்படும் தனு கரண புவன போகங்களைப் படைத்து அவற்றில் இச் சீவன்களைப் புகுத்தி, தம்மைப் பற்றி நிற்கும் மலவழுக்கைப் போக்கிக் கொள்ளுமாறு அருளுகின்றான். இவற்றிற்கு முதற்காரணமாகிய மாயை என்பது பாசவகையுள் கூறிய ஒன்றாகும். இதுவும் உயிரைப் பற்றி

நிற்பதாயினும், ஆணவத்தால் உண்டாகிய அறியாமையை உடைப்பதற்குப் பெருந்துணை செய்வதாகும். இதுவும் அனாதியானது; உயிர்போல் பதியின் சத்தியில் ஒடுங்கி, அவன் சங்கற்பித்தவழி மீளத் தோன்றும் இயல்புடையது. அதனால் ஆணவத்தை இயற்கை மலம் (சகச மலம்) என்றும், மாயையைச் செயற்கை மலம் (ஆகந்துக மலம்) என்றும் அறிஞர் கூறியிருக்கின்றனர். இந்த மாயையின் காரியமாகத் தோன்றியுள்ள உடல், கரணம், உலகு முதலியவை அசேதனமாக இருப்பதால், இம்மாயை அசேதனமாகும். ஆதலால்தான், இதனை

வாலிய சேதனமன்றுஇது, தீதறு செயல்கள்
கோதுக அசேதன மாதலின்; அலதேல்
காரணம் நியமம் என்னும் பேரிசை
எல்லாம் உடைக்கும் பொல்லாத் தோடம்
வல்லே எய்தும்? - ஞானா-21

என்கின்றார்.

மேலும், இந்த மாயை, தன் காரியப்பொருளால் ஆன்மாவைப் பற்றியுள்ள மலம் அறுமளவும் விடாது தொடர்ந்து, அற்றவழி, ஆண்டவனது சத்தியில் ஒடுங்கிப் பின் அவன் திருவுள்ளப்படி மீளத் தோன்றுவதாகும்.

ஓதுமாயா காரியம் நிற்பது, முடிவில் சீரிய
சத்தி வடிவிற் பொற்பொடு புணர்ந்து
தொடங்கற் காலை வலம்பட விளங்கும்;
ஆருயிர் ஏரிசைப் போகம்
சீரிதின் அருந்தத் திகழ்தனு முதலே - ஞானா-21

என்று இதனை விளக்குகின்றார். இதன்கண் ஆருயிர் போகம் அருந்தத் திகழ்தனு கரணாதிகளுக்கு முதலாகிய மாயை என்றதனால், இது பரமன் அருள் மிகுதியால் வேலை செய்வது என்பது பெறப்படும். ஆனால், அறியாமை மிக்கு வருந்தும் உயிர்கள் இதன் உண்மையினைத் தம் அறிவால் ஆராய்ந்து காணாது. இவற்றிற்கே அடிமையாகி, கன்மங்கள் பல செய்து மீளமீளப் பிறந்து இறந்து உழலுகின்றன. மலம் அறாமையின் உடலும் கருவியும் பிறவும் உயிர்களைச் சூழ்ந்து தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. உயிர்வகையின் தோற்றம் குறித்து அமைந்த காமவுணர்ச்சி தீங்குகளுக்கும் காரணமாதல்போல, மல நீக்கத்துக்கென

வந்த தனுகரணாதிகளை உயிர்கள் பிறப்பிறப்புக்களுக்கும் இன்ப துன்பங்களுக்கும் காரணமாக்கிக் கொள்கின்றன. ஆகவே, அறியாமை கொண்டு உயிரை மறைத்துத் துன்பம் உறுவிக்கும் ஆணவத்தைக் கெடுக்கப் புகுந்த ஆண்டவன் மாயா காரியமாகிய பிறிதொரு துன்பக் காரியத்தை உண்டுபண்ணுவது என்னை? என்றொரு வினா நிகழ்கின்றது. இதற்கு ஆசிரியர்.

"......உடையுறு
கறைகடி தகற்றப் பிறகறை பிடித்த
பெற்றியின் இவனுக் குற்ற வான்பிணி" - ஞானா-10

என்றும், மாயாகாரியமாகிய தனுகரணாதிகளைப் பாரிசேடப் பிரமாணத்தால் ஆன்மாவின் மலநீக்கத்துக்கென்றே ஆண்டவன் படைத்துளன் என்பார்.

"காரியம் காசினி யாதி; ஏரியல்
ஈசன் கத்தா; இவற்கிது போகம்
ஆதல் செல்லாது; அகன்றுயர் கருமம்
தானோ நுகர்தல் செல்லாது; ஆனாது
என்னை செய்தது என்னின், அன்னோ,
கொன்னே செய்யான், தன்நேர் இல்லோன்;
பாரி சேட மதனிற் பரனுக்கு
ஏரியல் பரன்பசு என்றறி இனிதே? - ஞானா-12

என்றும் கூறியுள்ளார். இவ்வாறு, உயிர்களைத் தனுகரணாதிகளில் கூட்டிப் பந்தியாதுவிடின் இவற்றிற்கு விடுதலை, (வீடுபேறு) இல்லை என்றற்கு.

"விரவிய பந்தம்
கூடா தோடின் குலவிய போகம்
துய்த்தல் செல்லான்; செல்லா னாக
எய்த்தல் இன்றாம் இருவினை யாக
அபவர்க்கமும் மற்று அடையான்" - ஞானா-10

என்று கூறுகின்றார்.

இங்ஙனம், ஆன்மாவிற்கு உதவியாக வந்துள்ள உடல், கரணம், உலகம், போகம் முதலியவற்றை அது நன்கு ஆராய்ந்து கண்டு. அவற்றிற்கே அடிமையாகாது. பாசச் சேதம் விரும்பி அதற்குரிய

முயற்சியில் இறங்கிக் கன்மச் சேத உபாயத்தால் மலங்களைப் போக்கி உண்மை ஞானம் பெற்று விடுதலையாகிய சிவபோகம் துய்த்தல் வேண்டும்.

"பயன்பல மாந்தி வியந்துறை காலை
வல்வினை எல்லை செல்லாக் காலத்து
ஒல்லென ஒப்ப உயர்பெருஞ் சிவனது
சத்தி நிபாதம் தழைப்ப மெய்த்தகு
குருபரம் பரனது அருளின் செவ்வி
வம்பறு சம்பிர தாயத் தஞ்சுடர்
உற்ற காலைச் சொற்றொடர் பற்றுத்
தேயாது யாவுமாய் அறிவகன்ற
ஆயாச் சிவனது அணிகிளர் சீர்த்தி
நின்மலத் தியையும் பின்மலத்து இயையான்
அந்தமில் பந்தம் மற்று இ(வ்)வணம்
சிந்துதல் சிந்தல் தெரியுங் காலே? - ஞானா - 8

எனக் கன்மச்சேத உபாயத்தால் மலநீக்கமும் வீடுபேறும் எய்தும் வகையை விளக்குகிறார்.

(தொடரும்)

தமிழ் அருச்சனை குறித்து தமிழ்நாட்டில் வினோபாஜி கூறியது:

தமிழில் வழிபாடு நிகழ்தல் மிகவும் இன்றியமையாததாகும். அதனால் மக்களிடத்து வழிபாட்டுணர்ச்சி பெருகுவதுடன் மக்களுக்கு வழிபாட்டில் உள்ளம் கலக்கும்.

ஆன்ம வளர்ச்சிக்கு அவரவரது தாய்மொழி ஒன்றே போதுமானது. ஆன்ம ஞானம் சில குறிப்பிட்ட மொழிகளில் மட்டுமே பூட்டி வைக்கப்பட்டிருக்கிறது என்ற மூடநம்பிக்கையை ஒழித்து விடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(இதழ் 9-12ன் தொடர்ச்சி)

சிலம்பில் தொல்காப்பியப் பதிவு – XI

(தமிழாகரர். தெ. முருகசாமி)

உலக மொழிகளை ஆராய்ந்தறிந்த அறிஞர்கள் சில தரவுகளின் அடிப்படையில் ஆறு மொழிகளை மட்டுமே செம்மொழி (CLASSICAL LANGUAGES) எனத் தேர்ந்தெடுத்துரைத்தனர்.

தமிழ், வடமொழி, சீனம், ஹுப்ரு, இலத்தீன், கிரேக்கம் என்ற அச் செம்மொழிகளுள் தமிழ் மட்டும் தனித் தன்மையுடையதாகக் கருத அதன் அடைமொழிச் சிறப்பொன்றே காரணமாகும்.

செம்மொழிக்கென வரையறுக்கப்பட்ட பதினொன்றில் இந்த அடைமொழி என்ற ஒன்று கூறப்படவில்லை. ஆனால் தமிழில் மட்டுந்தான் ஆயிரக்கணக்கான அடைகள் உள்ளன. ஒவ்வொரு அடைமொழியும் வெவ்வேறு பண்புநலங்களைக் கூறுவனவாக உள்ளன.

பற்பல சொற்களுக்கான பல்வேறு அடைமொழிகள் கூறப்பட்டாலும் மொழிக்குப் பெயராகிய "தமிழ்" என்ற சொல்லுக்கே எண்ணிலடங்கா அடைமொழிகள் உள்ளன. இதுபோல ஏனைய செம்மொழிப் பெயர்களுக்கு அடைமொழிகள் உண்டா என்பதே ஐயமாகும்.

எடுத்துக்காட்டாக, உலகத்தமிழ், ஒண்டமிழ், ஞாலத்தமிழ், வண்டமிழ், வளர்தமிழ், தண்டமிழ், இன்பத்தமிழ் என அடுக்கடுக்காகக் கூறலாம். இந்த ஓர் அடைமொழிச் சிறப்பால் ஏனைய செம்மொழிக்கெல்லாம் தமிழ் தனித்துவம் உடையதாம் எனலாம்.

மொழி கிளைப்பதற்கு இத்தகு அடைமொழிப் பங்களிப்பு மகத்தானதாகும் என்பதால்தான் தொல்காப்பியர், அடைமொழி பற்றிய இலக்கண வரையறையைக் கிளவியாக்கத்தில் கூறினார்.

அடைசினை முதல் என மூன்றும் மயங்காமை
நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல்

என்றும், (கிளவி.26)

இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்கா றல்ல செய்யு ளாறே

என்றும் (கிளவி.18) கூறிய நூற்பாக்கள் சிறப்பாகக் கருத்தைக் கூறினாலும் பொதுவாக அடைமொழி பற்றிய கருத்தை அனுமானிக்கத் தூண்டுகின்றன எனலாம்.

அதுதான், பொதுவாக ஒரு சொல்லுக்குரிய அடைமொழி ஒன்றாகவோ இரண்டாகவோ வரலாம் என்பதும் அங்ஙனம் வருங்கால் இனம் சுட்டியும் சுட்டாமலும் வரலாம் என்பதும் மேற்கூறிய நூற்பாக்கள் வழிப்பொதுவாக உணரக் கிடக்கும் உண்மைகளாகும்.

இங்ஙனம் அடைமொழி சார்த்தி உரைத்தாலும் அடைமொழிச் சார்த்திக் கூறாதது பற்றித் தொல்காப்பியர் கூறாவிட்டாலும் அவர்,

மொழிந்த பொருளோடு ஒன்ற அவ்வயின்
மொழியா ததனை முட்டின்றி முடித்தல்

என்ற பொருளதிகார மரபியல் நூற்பா (111) கூறும் உத்திகளுள் ஒன்றைக் கருத்தில் கொண்டு அடைமொழி கூறாததை ஒரோவழி கொள்ளலாம் எனலாம். ஆக வெளிப்படையாகச் சுட்டிய அடைமொழி போல் இல்லையானாலும் அடைமொழிக்குரிய அனுமானமாகக் கருத்தைப் பொருத்தி உணரலாம் எனத் தெரிகிறது. அந்த வகையில் காப்பியத் தலைப்பான "சிலம்பு" என்ற சொல், அடைமொழி புணர்த்தியும் அடைமொழி புணர்த்தாமலும் கூறப்பட்ட கதைபொதி சிறப்பை உணர்தலே இக்கட்டுரையின் கருத்தாகும்.

சூழ்வினைச் சிலம்பு, செய்வினைச் சிலம்பு, சித்திரச் சிலம்பு, சீறடிச் சிலம்பு, அணிச்சிலம்பு, அணிமணிச் சிலம்பு, போற்றரும் சிலம்பு, பொன்தொழில் சிலம்பு, தீவினைச் சிலம்பு, பொன்னஞ்சிலம்பு, செஞ்சிலம்பு, செம்பொற்சிலம்பு, தனிச்சிலம்பு, இணையரிச் சிலம்பு, அச்சிலம்பு, கோயிற் சிலம்பு எனப் பலவாகப் புணர்த்திய அடைகள் ஒவ்வொன்றும் அணிகலனாகிய சிலம்பின் காப்பியப் பங்களிப்பை ஒவ்வோர் வகையில் உணர்த்துவதாகவே உள்ளன.

மேற்கண்டவாறின்றி அடைமொழி புணர்க்கப்படாமல் கூறப்பட்ட சிலம்பும் உண்டு. சிலம்புள கொண்ம் எனக் கண்ணகி, கோவலனிடம் சிலம்பைத் தரும்போது கூறுகிறாள்! அவன் அச்சிலம்புகளைப் பெற்றதும் "சிலம்பு முதலாகச் சென்ற கலனோடு உலந்த பொருள் ஈட்டுதல் உற்றேன்" - என்றான்.

இங்ஙனம் அடைமொழியின்றிக் கண்ணகியும் கோவலனும் சிலம்பைக் கூறியது போலவே, சிலம்பொடு சென்ற சேயிழை எனச் சாத்தனாரும் சிலம்பின் வென்று என நாடக மகளிரும் கூறியுள்ளனர். அடைமொழி புணர்த்தாமல் கூறினாலும் கூறப்பட்ட அடைகள் யாவற்றையும் புணர்த்திப்பொருள் உணர்த்துவதால் காப்பியப் பிழை நேராதெனலாம்.

இவ்வாறு அடைமொழி புணர்த்தியும் புணர்த்தாமலும் கூறப்பட்டதைக் கொண்டு இன்றியமையாததோர் உண்மை கண்டறியுமாறுள்ளது. அதுதான் அடைமொழி முன் ஒட்டாக அமைந்ததுபோல அடைமொழி பின்ஒட்டாக அமையும் எனத் தெரிகிறது.

இப்பின் ஒட்டு முன் ஒட்டைப் போலல்லாத வகையில் காப்பியத்திற்கு விறுவிறுப்பைத் தருவதாக உள்ளதாம் என்பது கருத்து.

ஈண்டுரைக்கும் பின் ஒட்டு என்பது முன் அடைமொழி போன்றில்லாத சொற் புணர்ப்பு எனப் பொதுவாக உணர வேண்டும் என்பது கருத்து.

கண்ணகி கூறும் சிலம்பு உள என்றது கோவலனைத் திருத்தக் கூறிய செஞ்சொல்லாகும்.

அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் கோவலனும் "சிலம்பு முதலாக" என்றது இதுவரை வாழ்ந்த வாழ்க்கையை மாற்றிப் புதுப்பாதையில் நடைபயிலத் தொடங்கிய நம்பிக்கைச் சிறப்பை உணர்த்தியது.

சிலம்பொடு சென்ற சேயிழை எனச் சாத்தனார் கூறியது ஆரணங்காக இருந்த கண்ணகி ஆவேசச் சீர் அணங்காக மாறிய புதுமைக்குக் கங்கணம் கட்டியதாக உணர்த்துகிறது.

சிலம்பின் வென்று - என்ற நாடக மாந்தர்களின் கூற்றால் கண்ணகியின் பேரணங்குத்தனம் வெளிப்படுகிறது.

ஆக சொல்லின் முன்பின் அடைச்சொற்கள் காப்பிய நோக்கை நிறைவேற்ற உதவியாக உள்ளன எனத் தெரிகிறது. இவற்றிற்கெல்லாம் மேலாக அடைமொழியைச் சொல்லின் முன்னும் பின்னுமாகச் சேர்த்துக் காப்பியப் பொதுமையைப் புலப்படுத்த சொற்சிலம்பாட்டத்தையும் இளங்கோவடிகள் ஆடியதை மதுரைக் காண்டக் கட்டுரை காதை கொண்டு உணரலாம்.

மதுரையை எரித்த நிலையில் கண்ணகியின் முன்னர் மதுராபதிப் பெண் தெய்வம் தோன்றி நடந்தபல செயல்களுக்கான காரணங்களைக் கூறி அவளது சினந் தணிவித்தாள். அங்ஙனம் தோன்றியவள் சிவனின் அம்சமாகவே தோன்றியதாக இளங்கோ கூறிவரும் தொடர்ச்சியில், அர்த்தநாரித் தோற்றத்தைக் கூறுகின்றார். அங்ஙனம் கூறும் பலவற்றுள்,

வலக்கால் புனைகழல் கட்டினும் இடக்கால்
தனிச்சிறப்பு அரற்றுந் தன்மையள் (கட்டு. 9-10) என்றார்.

மதுராபுரித் தெய்வம் வலது காலில் வீரக்கழல் கட்டியிருந்தாலும், இடது காலில் சிலம்பு இருந்து அரற்றியதாம். இங்ஙனம் கூறியதில் முரண்பாடுள்ளதாக நுட்பமாக உணரலாம். மாதொருபாகனாகக் கூறும் சிவனது அர்த்தநாரி வடிவத்தில் வலப்பாகம் ஆடவனுக்குரியது என்பதைக் குறிக்க வலது காலில் கழல் இருந்ததாக இளங்கோ கூறினார். அவ்வாறே இடக்கால், பெண்ணிற்குரியதாகையால் அதற்கேற்ப சிலம்பணிந்தது கூறப்பட்டது பொருத்தமே! ஆனாலும் ஈண்டுள்ள இளங்கோவடிகளின் முன்பின்னாகக் கூறப்பட்ட அடைகளால் காப்பியத்தின் கதை தழுவிய சிறப்பு நுட்பமாகத் தொனிப்பதை உணர்ந்தின்புறுமாறுள்ளது.

கழல், சிலம்பு என்பன பொருள்கள். கழலுக்கு வலக்கால் முன் அடை. அதனுடன் புனைகழல் என்றதும் ஒரு சொல்லுக்கு ஓரடையின்றி இரண்டாகவும் வரும் என்று தொல்காப்பியர் கிளவியாக்கத்தில் கூறியபடி இரண்டு அடையுடன் வந்ததே வலக்கால், புனைகழல் என்றதாகும்.

இவ்வாறே சிலம்பும் இடக்கால் என்றும் தனி என்றும் இரண்டு அடைபெற்று இடக்கால் தனிச்சிலம்பு என ஆனது.

இங்ஙனம் கூறிய முன் அடைமொழி போலக் கழல் எனும் சொல் கட்டினும் என்ற சொல்லோடும் சிலம்பு எனும் சொல் அரற்றும் என்ற சொல்லோடும் தொடர்வது சிந்தனைக்குரியதாகிறது.

கழல் கட்டப்பட்டதால் அது வலக்காலில் அசையாமல் ஆடாமல் கிடக்கிறது. ஆனால் இடக்காலில் சிலம்பு கட்டப்பட்டாலும் அது கழல்போல் ஆடாமல் அசையாமலிருப்பதற்கும் மேலாக ஒலி எழுப்பிக் கொண்டே இருப்பது கழலுக்கு இல்லாத ஒரு சிறப்பாகும்.

நடக்கும் போதோ ஆடும்போதோ சிலம்பு ஒலிப்பது இயல்பாயினும் இளங்கோவடிகள் அரற்றும் என்றது சிந்தனைக்குரியதாகிறது. ஒலித்தல்

வேறு, அரற்றுதல் வேறு, ஒலிப்பில் அதாவது சிலம்பின் ஒலிப்பில் ஓசை இன்பம் உண்டு. ஆனால் அரற்றுதலில் வாய்விட்டுப் புலம்பும் வன்மம் தான் புலப்படும். இங்ஙனம் புலப்படும் பின் ஒட்டில் உள்ள இந்தப் பொருள் நுட்பத்தோடு முன் ஒட்டில் புனை கழல் என்றதற்கும் தனிச்சிலம்பு என்றதற்கும் ஒரு நுட்பம் உண்டு.

புனைதல் - புனைவு என்றால் கட்டப்பட்ட தான கருத்துத் தொனித்தாலும் புனைந்துரையாகக் கூறப்பட்ட கருத்தாடலுக்கும் இடந்தருதலால் கழலோடு புனைசேர்ந்த அடைமொழி சிந்தனைக்கு விருந்தாகிறது.

அவ்வாறே தனிச்சிலம்பு என்பது தனித்த சிலம்பு என்பதாகக் கூறப்பட்டாலும் ஒப்பற்ற என்ற கருத்தாடலை உணரச் செய்கிறது எனலாம். மேலும் கோவலனால் பிரித்தெடுத்து விற்க எடுத்துவந்ததால் தனித்ததாக இருந்த சிலம்பு என்ற கருத்தும் பெறச் செய்கிறது.

இங்ஙனம் பல்வேறாகச் சூழ்ந்து சிந்திக்கும் வகையில் கழலும் சிலம்பும் மதுராபதியின் அர்த்தநாரிக்கான தோற்றத்திற்குக் கூறப்பட்டாலும் கோவலன் கண்ணகி ஆகிய இருவரையும் ஒருசேர உணர வைக்கும் குறியீடாகக் கூறப்பட்டதாக அனுமானிப்பதில் தவறில்லை எனலாம். ஏனெனில் ஈண்டுக்கழல் கோவலனையும் சிலம்பு கண்ணகியையும் நினைப்பிப்பிதாக உள்ளன எனலாம்.

மதுரையில் கோவலன் சிலம்பு விற்க வந்தபோது அவனைப் பொற்கொல்லன் கள்வன் என்று இட்டுக்கட்டிப் புனைந்துரைத்துக் கோவலனை ஏதும் பேசமுடியாதபடி வாயைக் கட்டியதோடு, வந்த அதிகாரிகள் இவன் கொலைபடு மகன் அல்லன் எனக் கூறிய போதும் அவர்களது வாயையும் கட்டிவிட்டதால் கோவலன் மரணத்தில் கட்டுண்டான் என்ற குறிப்பைத் தொனிப்பதாக உள்ளதே புனைகழல் கடடினும் என்றதாகும்.

அவ்வாறே கையில் தனிச்சிலம்பாம் ஒற்றைச் சிலம்புடன் பாண்டியனுடன் வாதாடி வென்றதோடு வாழ்க்கையின் பல்வேறு துன்பச் சுமைகளைத் தாங்கியவாறே,

கீழ்த்திசை வாயில் கணவனொடு புகுந்தேன் மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கெனப் புலம்பியவாறே அரற்றிக் கொண்டே சேர நாடு சென்று தெய்வமானாள் கண்ணகி.

இவ்விருவேறு கதைபொதி கருத்தால் இளங்கோவடிகள் மதுராபதியின் வடிவில் கோவலன் கண்ணகியர்களைக் குறியீடுகளாக காட்டினார் எனலாம். ஏனெனில் அர்த்தநாரியாகக் காட்டத் தொடங்கிய இளங்கோவடிகள் வலக்காலின் வீரக்கழல்போல இடக்காலிலும் வீரக்கழல் காட்டியிருக்க வேண்டும், அங்ஙனம் காட்டுவது எமனை இடது காலால் உதைத்த வீரப்பரிசாகக் கழல் அணிந்ததாகக் காட்டியிருக்கலாம். அதனை வேண்டுமென்றே மறந்து சிலப்பதிகாரக் கதை தழுவிய அளவில் முன்ஒட்டாகச் சிலம்புதான் அதுவும தனிச்சிலம்புதான் என்ற பொருத்தத்தை நினைவோடு இடக்காலுக்குச் சிலம்பு என்றதோடு கண்ணகியில் அறாத அரற்றலைச் சேர்த்துப்பின் ஒட்டில் காட்டிய சொற்சிறப்பால் தொல்காப்பியர் உணர்த்திய அடைமொழிக் கருத்து சிலப்பதிகாரப் பதிவால் கற்போர் நெஞ்சில் நெஞ்சையள்ளும் சிலம்பாகப் பதிவாகிறது எனலாம்!

— — — —

மனிதனை நேசி

பாரெல்லாம் புகழும் வெற்றிகளைப் பெற்றிடுக
முதலில் உன்னை அறிந்து கொள்
ஓயாது உழைத்திடல் மட்டும் போதாது
சிந்தனை செய்! சிந்தனைக்கென பொழுதை ஒதுக்கீடு செய்க
சிந்தனை தந்த தகுதி சால் முடிவுகளைப் பயன்படுத்து!
எண்ணி எண்ணி திட்டங்களைத் தீட்டுக
ஐயப்படுக! ஆயினும் வெற்றியை நோக்கியே உழைத்திடுக
உன்னையே உனது குறிக்கோளினால் அயர்விலாது அர்ப்பணித்திடுக.
இல்லாதபொழுது இல்லைஎன்று கூறும் துணிவினைப்பெறுக
நாளும் தவறுகளைத் திருத்திப் புத்துயிர்ப்பெறுக
இடறிவிழும் பொழுதெல்லாம் எழுந்து ஏற்றத்துடன் பயணத்தை தொடங்குக
கடவுளைப் போற்று! மனிதனை நேசி!

– அருள்நெறித்தந்தை

மராட்டிய மங்கையின் புரட்சி

(கவிவேந்தர். கா. வேழவேந்தன்)

இந்தியமண் விடுதலையைப் பெற்ற பின்னர்
எழுபதாம் ஆண்டினையே எட்டும் போதும்,
சொந்தமெனக் கழிவறையும் வீட்டுள் இன்றிச்
சுற்றியுள்ள திறந்தவெளி தேடு கின்றார்,
அந்தவகை மக்கள்தொகை பாதி என்றால்,
"அவமானம்" இதைத்தவிர வேறென் றுண்டா?
நொந்தமனக் குமுறலுடன் ஒருநிகழ்ச்சி
நுவல்கின்றேன் தங்களின்நல் தீர்ப்பை வேண்டி!

வடபுலத்து மராட்டியமா நிலச்சிற் றூரில்
வாழ்ந்தமங்கை சங்கீதா என்பார் காலைக்
கடன்கழிக்கத் தகுந்தஅறை வீட்டில்கட்ட
கணவனிடம் பலதடவை சொல்லிப் பார்த்தாள்;
அடம்பிடித்த மடக்கணவன் அசைய வில்லை!
அவர்மகளும் பருவத்தை எய்திவிட்டார்;
திடஉள்ளச் சங்கீதா கழுத்து தாலி
சென்றுவிற்றுக் கழிவறையைக் கட்டிவிட்டார்!

இச்செய்தி தீயாகப் பற்றிக் கொள்ள
எப்படியோ அரசினரும் அறிந்தார்; அந்த
மெச்சுகின்ற செயல்புரிந்த மங்கை நல்லாள்
மேன்மையினைப் பாராட்டும் வகையில், மீண்டும்
தச்சர்செய்த தாலிமட்டுமின்றி, நல்ல
தங்கத்தில் சங்கிலியும் பரிசாய்த் தந்தார்!
நச்சென்ற இச்செய்தி நாட்டை ஆளும்
நல்லோரின் மனமெல்லாம் தைத்தி டாதா?

— — —

நல்வழியைத் தேடுவோம்

கவிஞர்: கா. கருப்பையா

மன்னர்களின் காலம்போய்
மக்களாட்சி மலர்ந்ததுபோல்
எண்ணமெல்லாம் ஈடேற்றும்
ஏற்றம் பெற்ற நம்நாடு

இயற்கை எழில் மிகுந்ததோடு
இன்பவாழ்வுக்கேற்ற நாடு
செயற்கையான செல்வத்துடன்
செழித்துவாழும் செல்வநாடு

அன்னை தந்தை போற்றுகின்ற
அழகுச்செல்வம் இந்த நாடு
பண்பு பாசம் மிகுந்திருக்கும்
பக்திகொண்ட பாரத நாடு

நாட்டின்மீது பற்றுக் கொள்வோம்
நாட்டுவளம் காத்து நிற்போம்
நட்புக்கொண்டு அனைவரோடும்
நல்வழியைத் தேடிச் செல்வோம்

எல்லா மதங்களையும் சமபாவனையுடன் ஏற்படுவது இந்து. இது வழிவழி வளர்ந்து வந்துள்ள கருத்து; கொள்கை; கோட்பாடு! இதற்கு நேர்மாறாக மதவேற்றுமை கற்பிப்பதும் பல்வேறு மதங்களைச் சேர்ந்த மக்களுக்கிடையில் மத துவேஷங்களைப் பரப்புவதும் இந்துமதத்திற்கு உடன்பட்டதல்ல.

– அருள்நெறித்தந்தை

சிறப்பாசிரியருக்கு வந்த கடிதங்கள்....

ஆனந்த விகடன் - "அன்பே தவம்" - தொடர் வாரந்தோறும் மெருகேறி வருகிறது. புதிது புதிதான பரிமாணங்களில் அனுபவ விளக்கங்களும் மேற்கோள் தரவுகளும் சிறக்கின்றன.

மனதை இலகுவாக்கி எளிய வாழ்க்கைக்கான நம்பிக்கையைச் சின்னஞ்சிறு அனுபவங்களில் இருந்து பெறவைக்கும் தனிச்சிறப்புமிக்க நடைதமிழுக்கு வாய்க்கிறது. தொடரட்டும்.

- முனைவர். செ. சேதுபதி, புதுச்சேரி

"அன்பே தவம்" - தொடரில் தொடர்ந்து வரும் சமுதாயக் கருத்துக்கள் தங்கள் திருவுளத்தில் சுரக்கும் அன்பின் ஊற்றாகவே நான் அறிகிறேன். - ஆர்.கே.சண்முகம், சேலம்

காவி உடையணிந்த கனிவான சங்கத் தமிழே! உனது பாதம் பணியக்கூட எனக்குத் தகுதியில்லை. வாரந்தோறும் விகடனில் "அன்பே தவத்தில்" எங்களுக்கு அருள்வாக்குத் தருகின்றாய். நான் எனச் சொல்லாமல் நாம் எனச் செப்புகின்றாய். கற்றுவிட்டேன் என்பதை விட இன்னும் கற்க வேண்டும் என்கிறாய். தவத்திரு பொன்னம்பலமே நீ அடக்கத்தின் உறைவிடம். அன்பு உனது பிறப்பிடம். குன்றக்குடி என்ன சாதாரண இடமா? வயலின் வைத்தியநாதனை பேசவைத்த புண்ணிய ஸ்தலமல்லவா? அருகில் உள்ள சிறுகூடற்பட்டி திரைப்பட பாடல் மூலம் மானுட ஜாதியை ஆட்டி வைத்து இறந்தும் இறவாப் புகழாகத் திகழும் நம் கண்ணதாசன் பிறந்து தவழ்ந்த மண்ணல்லவா! காரைக்குடி கம்பனடிப்பொடி கணேசன் சட்டையில்லாமல் நடைபோட்டு தமிழ் வளர்த்த பூமியல்லவா? வள்ளல் அழகப்பர் மற்றும் சங்கீதத்தை இங்கீதமாக்கி பல மேடை நாடகக் கலைகளைத் தந்த நடிகர்கள் நிறைந்த சங்கம் இப்படி அடுக்கிக்கொண்டு போகலாம். ஆனால் அந்தப் புகழெல்லாம் தங்கள் சங்கத் தமிழ் கேட்டால் நாணிவிடும்.

"போர் வீரரின் வாள்முனையைவிட தங்கள்
புண்ணிய எழுதுகோலுக்கு சக்தி அதிகம்"

தங்கள் தமிழ்ப்பணி தொடரவும், என்போன்றோர் படித்துப் பயனடையவும் "வள்ளி மணாளன்" தங்களுக்கு நுண்ணறிவும் நோயற்ற வாழ்வும் - நீண்ட ஆயுளும் வழங்கி எந்தநாளும் அவன் கைதவழும் வேல் தங்கள் எழுதுகோலுக்கு துணையாகட்டும்!

- துரை. வீரப்பன், மேலூர், செவல்பட்டி

ஆனந்தவிகடனில் "அன்பே தவம்" ஆனந்தக் களிநடம்புரிய வாராவாரம் மெருகேறுகிறது.

இதை நான் குன்றக்குடியின் திருமடத்தின் உபதேசமாகவே உணர்கிறேன்.

அண்ணல் காந்தியை எழுத்தில் ஓவியமாகத் தீட்டிய உன்னதத்திற்கு ஈடு இணை இல்லை!

மகாசந்நி தானத்தின்
மண்ணும் மனிதராம்
மாபெரிய நூல்தான்
மதிப்புறு ஆனந்த
விகடனில் வந்ததுபோல
அன்பே தவமுமே
தகவுடன் நன்னூலாய்
ஆக்கம் பெறுமென
நீள நினைந்து
விகடனுக்கும் மடலை
நீட்டிப் புகழ்ந்தே
எழுதி யுள்ளனன்!

- தெ. முருகசாமி, புதுச்சேரி

மனிதனிடம் உள்ள குறை நிறைகளுக்கு அவன் வாழும் சமுதாயமும் அவனை ஆளும் அரசும் பொறுப்பேற்க வேண்டும். மக்களாட்சி முறையில் சட்டவிதிகள் என்ற இரும்புப் பிடிகளை விட, நெகிழ்ந்து கொடுக்கும் முறை பயன் அளிக்கும்.

இன்றைய கல்விமுறை தேர்வையே இலட்சியமாக உடையது. தேர்வை நோக்கிய நிலையில் மனப்பாடம் நினைவாற்றலைச் சோதிக்கும் கல்வியாகிறது. மூளைப்புலன்களில் நினைவுப்புலன் மட்டுமே தொடப்படுகிறது. தூண்டப்படுகிறது. இதனுடைய தாக்கம் - வாழ்க்கையில் வன்கண்மைக்கும் துணைநிற்கவே துணை செய்கிறது.

- அருள்நெறித்தந்தை

தமிழறிஞர்

சிலம்பொலி செல்லப்பன் காலமானார்



சிறந்த சொற்பொழிவாளரும் எழுத்தாளருமான சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் 6.4.2019 அன்று காலமானார். இப்பெருந் தமிழறிஞரின் மறைவு தமிழுலகிற்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு. இளம் வயதிலேயே சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளையவர்களால் "சிலம்பொலி" என்று பாராட்டப்பெற்றவர். "கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்" என்னும் திருக்குறளுக்கு ஒப்ப இவர்தம் பேச்சாற்றல் அனைவரையும் ஈர்த்தது.

நமது குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக நீங்காத தொடர்பும் உறவும் கொண்டிருந்த அறிஞர் பெருமான்....... ஆண்டு பறம்புமலை (பிரான்மலை)யில் நிகழ்ந்த வள்ளல் பாரி விழாவில் அருள்நெறித்தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களால் "நூலறிபுலவர்" விருது பெற்றவர். இவர் எழுதிய நூல்கள் பல. அவை எனறும் வாழும் இனியதமிழ்க் கருவூலங்கள். இத்தகு அறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் மறைவு குறித்து "மக்கள் சிந்தனை" மிகவும் வருந்துகிறது. அவர்தம் குடும்பத்தாரும் நண்பர்களுக்கும் அன்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைப் புலப்படுத்திக் கொள்கின்றது. அப்பெருமகனார் நல்லுயிர் இன்ப அமைதி பெற இறைஞ்சுகிறது. – ஆசிரியர்

தமிழகத்தை நன்னெறிப்படுத்துதற்குரிய காப்பியம்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

இன்றைய தமிழகத்தை நன்னெறிப் படுத்துதற்குரிய ஒரே காப்பியம் சேக்கிழார் காப்பியமேயாம். சேக்கிழார் எடுத்துக் கூறும் திருமுறை நெறியே செழுந்தமிழ் வழக்கு. இச்செழுந்தமிழ் வழக்கு தொல்காப்பியர் காலந்தொட்டு வளர்ந்து வரும் மரபு. ஆதலால் சேக்கிழார் செந்நெறி நிற்போமாக! திருத்தொண்டினால்தான் வையகத்தை வாழ்விக்க முடியும். ஒரு தத்துவத்திற்கு மக்கள் மன்றத்தில் நிலையான இடத்தைப் பெற்றுத்தருவது பிரசாரங்கள் மட்டுமல்ல. உபதேசங்கள் மட்டுமல்ல. அத்தத்துவம் செயலுருவம் பெற்றாக வேண்டும். மீண்டும் அப்பரடிகள் தொடங்கிய உழவாரப்பணி தொடர்ந்து நடைபெற வேண்டும்.

அவ்வழி நமது திருக்கோயில்கள் பேணிக்காக்கப் பெறுதல் வேண்டும். திருக்கோயில்கள் நமது வாழ்வின் மையம்; உயிர்நாடி! திருக்கோயில்களைக் கடவுளின் இருப்பிடமாக மட்டும் கருதிச் சமுதாயத்தைப் புறத்தே தள்ளிய அயல்வழக்கின் கொடுமையை உணர்க! அக்கொடுமையால் திருக்கோயில்கள் சமுதாயத்திலிருந்து விலகிவிட்டன. சமுதாயமும் திருக்கோயில்களிலிருந்து நெடுந்தொலைவிற்கு விலகி விட்டது. இல்லை இத்திருக்கோயில்கள் மாறுபாடாகக்கூட நடக்கத் தலைப்பட்டுள்ளன. கடவுட்பொருள் தனிமைப்படுத்தப்பெற்று ஏகபோகத்திற்குரிய முதல் போலாகிவிட்டது. புறத்தே தள்ளப்பட்ட மக்களோ "இவர்தேவர் அவர் தேவர்" என்று தேடி அலைந்து எய்த்துக் களைத்துப் போகின்றனர்! கடவுளும் ஆன்மாக்களும் கலந்து மகிழும் இடமாகிய திருக்கோயில்களை மையமாகக்கொண்டே வளர வேண்டும்; விளக்கம்பெற வேண்டும். "கோயிலைத் தழுவிய குடிகளும், குடிகளைத் தழுவிய கோயிலும் காணவேண்டும்". வாழ்க்கைப் போக்கில் சமூகத்தில் நிகழும் சிக்கல்களுக்கு, திருக்கோயில்களில் பஞ்சாயத்துக்கள் காணப்பட்டு, அவற்றின் மூலம் தீர்வுகாணப்படவேண்டும். திருக்கோயில்கள் சமுதாயப்பணிமனைகளாக உருக்கொண்டால் உடைமைச் சிக்கல்கள் தோன்றா; குத்தகை வரவில்லை, வசூலாகவில்லை என்றெல்லாம் கவலைப்படவேண்டிய அவசியம் இருக்காது ஏன்? களவுகளைக்கூட தவிர்த்துவிடலாம். மீண்டும் பெண்மை பெருமை பெறவேண்டும். காதல் திருமணங்கள் நிகழவேண்டும். ஒரு வீட்டில் இன்பம் ஒரு வீட்டில் துன்பம் என்ற நிலை தொடரக்கூடாது. எல்லோரும் இன்புற்று வாழவேண்டும் மண்ணில் விண்ணகம் காணவேண்டும். இதுவே சேக்கிழார் காட்டிய செழுந்தமிழ் வழக்கு.

உ
சிவமயம்



தெய்வப்பழநியில் புகழ்பெற்றது
பழநி
பரிமள விலாஸ்
S.சித்தநாதன்

ஜவ்வாது வாசனை விபூதி
&
ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்
வாங்கி உபயோகியுங்கள்

Prop : S. சித்தநாதன் சன்ஸ்
அடிவாரம், பழநி – 624 601.

போன் கடை : 242405 வீடு & ஸ்டோர் : 242406



குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனக் கல்வி அறக்கட்டளை

தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவு

தொழிற் பயிற்சி மையம் (ITI & IS)

(மத்திய, மாநில அரசு அங்கீகாரம் பெற்றது)

குன்றக்குடி - 630 206



மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது

மத்திய அரசு அங்கீகாரம் பெற்ற தொழிற் பிரிவுகள்

தொழிற்பிரிவுகள்	பயிற்சிக்காலம்	குறைந்தபட்ச கல்வித்தகுதி
1. MMV – மெக்கானிக் (மோட்டார் வெகிக்கிள்)	2 ஆண்டுகள்	10 ஆம் வகுப்பு தேர்ச்சி
2. EM – எலக்ட்ரானிக் மெக்கானிக்	2 ஆண்டுகள்	10 ஆம் வகுப்பு தேர்ச்சி
3. COPA – கம்ப்யூட்டர் ஆபரேட்டர் & புரோகிராமிங் அசிஸ்டெண்ட்	1 ஆண்டு	10 ஆம் வகுப்பு தேர்ச்சி
மாநில அரசு அங்கீகாரம் பெற்ற தொழிற் பிரிவுகள்		
4. A.C. – மெக்கானிக்	1 ஆண்டு	8 ஆம் வகுப்பு தேர்ச்சி
5. E.T. எலக்ட்ரிகல் டெக்னீசியன்	1 ஆண்டு	8 ஆம் வகுப்பு தேர்ச்சி

★ வெளியூர் மாணவர்களுக்கு விடுதி வசதி உண்டு. ★ பயிற்சி முடிந்ததும் வேலை வாய்ப்பு. அப்ரண்டிஸ் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்படும்.

★ SC/ST மாணவர்களுக்கு அரசு உதவித்தொகை பெற்றுத் தரப்படும்.

★ பயிற்சியின்போது புகழ்பெற்ற நிறுவனங்களுக்கு அனுப்பி (IN PLANT TRAINING) பயிற்சி அளிக்கப்படும்.

★ குறைந்த இடங்களே உள்ளன. விரைவில் சேர்ந்து பயனடைவீர்

மேலும் விவரங்களுக்கு,

முதல்வர், தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவுத் தொழிற்பயிற்சி மையம்
குன்றக்குடி - 630 206, சிவகங்கை மாவட்டம்
☎ : (04577) - 264287, 264457, செல் : 9047325086, 9790543857, 9791930889

BOOK POST
Book pocket containing printed matter
MAKKAL CHINTHANAI-April - May 2019 Date of Publication 18-05-2019
Price Rs. 8-00

பெறுநர்
திரு
C129
திருவருள் திரு சுவாமிகள் அவர்கள்
கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்
மானகிரி அஞ்சல்
காரைக்குடி வழி

அச்சிட்டோர் : சண்மு



தவத்திரு குன்றக்குடி அடிகளார் குருபூசை விழாவில்
ஆதீனப்புலவர் திரு. க. கதிரேசன் அவர்களுக்கு, தவத்திரு. குன்றக்குடி அடிகளார் விருது வழங்கும் நிகழ்வு.
நாள் : 19-4-2019